# முன்னேற்ற அறிக்கை
# 2014

தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# தேசிய கல்வி நிறுவகம்
# முன்னேற்ற அறிக்கை - 2014

## 1.0 அறிமுகம்

1985 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின்படி நிறுவப்பட்டுள்ள தேசிய கல்வி நிறுவகம் கீழ்வரும் நோக்கங்களை எய்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

(அ) இலங்கையில் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், செயற்பாடுகள் என்பன தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.

(ஆ) கல்வியின் பல்வேறு சிறப்புத் துறைகளில் பட்டப்பின் கல்விக்கு ஏற்பாடு செய்தல், அதனை மேம்படுத்தல்.

(இ) கல்வி முறைமையின் நிறைவேற்றுகை, இலக்ககள், அமைப்புகள், உள்ளடக்கம், முறைமையியல் என்பன உட்பட கல்வி முறைமையின் மீதும், கல்வியின் சமூக, பொருளாதார மற்றும் ஏனைய அம்சங்கள் மீதுமான கற்கைகளை நடாத்துதல், மேம்படுத்துதல்.

(ஈ) கல்விசார் நோக்கங்களுக்காகத் தொழினுட்பவியலின் இசைவாக்கம் உட்பட, கல்வி முறைமையில் புத்தாக்கப் பயில்வுகளை ஆரம்பித்தல், மேம்படுத்தல்.

(உ) கல்வி முறைமையிலுள்ள ஆளணியினரின் உயர் தொழில் தகைமையையும் முகாமைத்துவத் தகைமையையும் அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்தல்.

(ஊ) கல்வித் துறையின் நிபுணத்துவ சேவைகளை அரசாங்கத்துக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிறுவனங்களுக்கும் கிடைக்கச் செய்தல்.

(எ) அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுதல்.

(ஏ) ஒத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைத்துச் செயற்படல்.

தேசிய கல்வி நிறுவகமானது பாடசாலை முறைமையினது கலைத்திட்ட அபிவிருத்தி, கல்வித் துறையில் ஈடுபட்டவர்களினது வாண்மை விருத்தி, கல்விக் கொள்கைகளை அமுல்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்தல் போன்றவற்றிற்கு பொறுப்பாக விருக்க உருவாக்கப்பட்ட அமைப்பாகும். இதன்படி உள்நாட்டு மற்றும் உலகளாவிய ரீதியில் காணப்படும் கேள்விகளை ஈடுசெய்யக்கூடிய வகையில் தலைமைத்துவத்திற்கான வாண்மை தேர்ச்சிகளை பாடசாலை முறைமைக்கு வழங்கி, விஞ்ஞான ரீதியிலான தகவல்களை வழங்கக்கூடிய ஆய்வுகளுக்காக வழிகாட்டல் மற்றும் கல்வி அபிவிருத்திக் கான கொள்கைகளை உருவாக்க வசதியளிக்கின்றது.

இலங்கையில் தற்போதுள்ள கலைத்திட்டக் கொள்கைகளுக்கு அமைவாக கலைத்திட்ட மறுசீரமைப்பானது 8 ஆண்டுகளுக்கு ஒரு தடவை மேற்கொள்ளப்படும். 2005 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கலைத்திட்டமானது 2010 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டது. 2012 ஆம் ஆண்டில் தற்போதுள்ள கலைத்திட்டம் பகுத்தாராயப் பட்டு உறுதியான அடித்தளங்களினூடாக இற்றைப்படுத்தப்பட்ட கலைத்திட்டமாக 2015 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டின் பாடசாலை கலைத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது தரம் 7 மற்றும் 11 ஆந் தரங்களுக்கமைய ஆசிரியர் வழிகாட்டிகளை தயாரித்தல், தரம் 8 பாடத்திட்டத்தை தயாரித்தலுமாகும். கலைத்திட்டம் தொடர்பான நிதி ஒதுக்கீடுகளானவை ஆரம்பத்தில் பாடசாலை கல்வி முறைமையை பரிமாற்றுவதற்கான அறிவு கேந்திர மைய செயற்றிட்டத் தினூடாகவும் யுனிசெப் நிறுவனத்தினூடாகவும் கல்வித் துறை அபிவிருத்தித் துறை செயற்றிட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 2014 ஆம் ஆண்டில் 10 000 வரையிலான உள்நாட்டு வெளிநாட்டு நபர்கள் அதாவது பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் அதேபோல் கல்வி நிர்வாகிகள் நிறுவனத்தி னால் நடாத்தப்பட்ட பல்வேறு வகையான பாடநெறிகளைப் பயின்றனர். இதனூடாக தேசிய கல்வி நிறுவகத்திற்கு நிறுவனத்தின் செலவினத்தின் ஒரு பகுதியை ஈடுசெய்வதற்கான குறிப்பிடத்தக்களவு வருமானத்தை பெற்றுக் கொள்ள வாய்ப்பாயிருந்தது.

2014 ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவகம், ஆசிரியர் வழிகாட்டிகள், பயிற்சியாளர்களை பயிற்றுவிப்பதற்கான கலைத்திட்ட கருவிகளை தயாரித்தல், இலகு கணிதத்திற்காக 10 000 பிரதிகளை அச்சிட்டு பகிர்வு செய்தல் என்பவற்றிற்கு முன்னுரிமையளித்திருந்தது. இதைத்தவிர க.பொ.த (சா.த) கணித பாடத்திற்கான வினா வங்கியொன்றை நிறுவியமை கணித பயிற்சியில்லாத கணிதம் கற்பிக்கும் 500 ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை வழங்கியமை தேசிய கல்வி நிறுவகத்தின் முக்கிய பணிகளாயிருந்தன.

தேசிய கல்விக் கொள்கைகளை அடைந்து கொள்வதற்காக, தேசிய கல்வி நிறுவனத்தின் ஆய்வுத் துறை சில ஆய்வுகளை மேற்கொண்டு முக்கிய பங்காற்றியிருந்தது. இதில் பிரதான ஆய்வுகளாக எதிர்கால கல்விக் கொள்கைகளை இனங்காணல், ஆரம்பக் கல்வி மாணவர்களது (தரம் 1 மற்றும் தரம் 2) செவிமடுக்கும் திறன்களை இலகுபடுத்திய ஆய்வு, கல்வி அமைச்சோடு இணைந்து நீர்கொழும்பு கல்வி வலயத்தைச் சார்ந்த தரம் 3 மாணவர்களது மொழியாற்றலை விருத்தி செய்வதற்கான ஆய்வினை மேற்கொண்ட துடன், அவ்வாறான ஆய்வுகளை சம்பந்தப்பட்ட கட்சியினருக்கு வெற்றிகரமாக பரவற் செய்தமை என்பன முக்கிய பணிகளாக அமைந்தன. இதைத்தவிர சார்க் கல்வி ஆய்வு சஞ்சிகையினை வெளியிடுவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 2014 ஆம் ஆண்டில் 200 பயிற்றுனர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட தலைப்புகளில் ஆய்வு முறைமை யியலில் தொடர்பில் தேசிய கல்வி நிறுவகத்தினால் பயிற்றுவிக்கப்பட்டனர். RESC மாநாட்டின் மூலம் 200 பயிற்றுனர்கள் ஆங்கில மொழித் துறையினரால் பயிற்றுவிக்கப்பட்டனர்.

2 000 தொழினுட்பத் துறை சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கு பயிற்சியளிக்கப் பட்டது. தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் ஆளணியின் தராதரத்தை பல்கலைக்கழக கல்விசார் ஆளணியினரோடு இணக்கச் செய்வதற்காக 10 கல்விசார் தேசிய கல்வி நிறுவக ஆளணியினரும் மலேசிய விஞ்ஞான முகாமைத்துவ பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தினை பயில்வதற்காக வாய்ப்புகள் அளிக்கப்பட்டிருப்பதன் மூலம் நிறுவன இலக்கினை அடைவதற்கான ஒரு சமிக்ஞை தென்பட்டது. இதற்காக நிதி அனுசரணையை ஆசிய அபிவிருத்தி வங்கியும் உலக வங்கியும் வழங்கியிருந்தன.

## 2.0 தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவகக் கட்டமைப்பு

### 2.1 நிறுவகப் பேரவை 2014

தேசிய கல்வி நிறுவகத்தின் சட்டத்திற்கமைவாக நிறுவகப் பேரவையானது கீழ்வரும் அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றது.

- விதந்துரைக்கப்பட்ட விதிகளுக்கமைவாக நிறுவகத்திற்குத் தேவையான ஆட்சேர்ப்பு களைச் செய்தல்.
- ஊழியர்களது கூலிகள், சம்பளங்கள், கொடுப்பனவுகள், நியதிகள், நிபந்தனைகள் என்பவற்றைத் தீர்மானித்தல்.
- ஒழுக்க வரன்முறையை தயாரித்தல்.
- ஊழியர்களுக்கான சேமலாபநிதி, ஊழியர் நலன்கள் என்பவற்றை உருவாக்கி அதனை செயற்படுத்தி அந்நிதியங்களுக்குத் தேவையான பங்களிப்பினைச் செய்தல்.

**கீழ்வரும் அங்கத்தவர்கள் 2014 ஆம் ஆண்டு நிறுவகப் பேரவையில் சேவையாற்றினர்.**

**திரு. அனுர திசாநாயக்க** — **தலைவர்**
(செயலாளர் - கல்வியமைச்சு) — (07.08.2013 வரை)

**பேராசிரியர் டப்ளியு. எம். அபேரத்ன பண்டார** — **உறுப்பினர்**
(பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்)

**பேராசிரியர் எஸ். சந்திரசேகரம்** — **உறுப்பினர்**
(முன்னாள் பீடாதிபதி கல்விப் பீடம் - கொழும்புப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் அர்ஜுன் டீ சில்வா** — **உறுப்பினர்**
(பேராசிரியர், மருத்துவப் பீடம் - களனிப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் முதியன்சே திசாநாயக்க** — **உறுப்பினர்**
(சிரேஷ்ட பேராசிரியர், பணிப்பாளர் - நுண்கலைப் பல்கலைக்கழகம்)

**பேராசிரியர் ரொலன்ட் அபயபால** — **உறுப்பினர்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப் பீடம் - கொழும்புப் பல்கலைக்கழகம்)

**கலாநிதி டீ. ஏ. பியசிறி** — **உறுப்பினர்**
(உபவேந்தர், தொழினுட்ப தொழில் சார் பல்கலைக்கழகம்)

**திரு. மஞ்சுல மக்கும்பர** — **உறுப்பினர்**
(வழக்கறிஞர்)

**திரு. பி. ரணேபுர** — **உறுப்பினர்**
(மேலதிகச் செயலாளர், உயர்கல்வி அமைச்சு)

**கலாநிதி சாரங்க அழகப் பெருக** — **உறுப்பினர்**
(பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை)

**திரு. ஜி. கே. இத்தமல்கொட** — **உறுப்பினர்** (01.08.2013 இலிருந்து)
(மேலதிக பொது முகாமையாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை)

**திருமதி. வீ. டீ. சீ. பீ. பெரேரா** — **நிறுவகப் பேரவைச் செயலாளர்**
(பணிப்பாளர், வெளியக வள முகாமைத்துவ அலகு, தேசிய கல்வி நிறுவகம்)

## 2.2 2014 ஆம் ஆண்டின் கல்வி அலுவல்கள் சபை

நிறுவகப் பேரவைக்கு மேலதிகமாக நிறுவகத்தின் சகல கல்வி விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்குவதற்காக, கல்வி முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் வேறு துறைகளில் பாண்டித்தியம் பெற்ற அறிஞர்களைக் கொண்ட ஒரு கல்வி அலுவலகள் சபை செயற்படுவதுடன் இக்கல்வி அலுவல்கள் சபையினால் நிறுவகத்தின் கல்விசார் நடவடிக்கைகள் தொடர்பில் ஆலோசனை, மேற்பார்வை, தலைமைத்துவம் என்பன வழங்கப் படுகின்றன. இக் கல்வி அலுவல்கள் சபையின் பணிகள் பின்வருமாறு:

- அனைத்துக் கல்வி அலுவல்கள் தொடர்பிலும் பேரவைக்கு ஆலோசனைகள் வழங்குதல்.
- கல்வி அலுவல்கள் தொடர்பில் பேரவையினால் விதிக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களை ஆய்வு செய்து அறிக்கையிடல்.
- நிறுவகத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகள், பயிற்சி வேலைத்திட்டங்கள், பரீட்சைகள் தொடர்பான விதந்துரைகளை நிறுவகப் பேரவைக்கு முன்வைத்தல்.
- பல்வேறு பாடநெறிகளுக்கான ஆட்சேர்ப்பு வரையறைகள், கட்டணங்கள் தொடர்பாகப் பேரவைக்கு விதந்துரைத்தல்.
- பல்வேறு பாடநெறிகளை நடத்துதல், அவற்றுக்கான பரீட்சை சட்டதிட்டங்களை வகுத்தல், மேலும் அனைத்து பயனாளிகள் தொடர்பான விதந்துரைகளை பேரவைக்கு முன்வைத்தல்.
- நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சகர்களாக நியமிப்பதற்குப் பொருத்தமானவர்களின் பெயர்களை பேரவைக்குச் சிபாரிசு செய்து வழங்குதல்.
- கல்வி அலுவல்கள் தொடர்பான புலமைப் பரிசில்கள், பதக்கங்கள், படிகங்கள் வழங்கு வதுடன் அதற்கான சட்டதிட்டங்கள் தொடர்பாகவும் பேரவைக்கு விதந்துரைத்தல்.

- புலமைப்பரிசில்கள், பரிசுகள், படிகங்கள், பதக்கங்கள் முதலானவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தகுதியானவர்களை பேரவைக்குப் பரிந்துரை செய்தல்.
- பேரவையின் அனுமதியுடன் சபைக்கு உறுப்பினர்கள் தவிர்ந்த பொருத்தமானவர்களை நியமனம் செய்தல்.

**2014 இற்கான கல்வி அலுவல்கள் சபை பின்வரும் அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.**

| | |
|---|---|
| **பேராசிரியர் டப்ளியு. ஆரியதாச டி சில்வா**<br>(முன்னாள் பீடாதிபதி கல்விப் பீடம் - கொழும்புப் பல்கலைக்கழகம்) | **தலைவர்** |
| **பேராசிரியர் டப்ளியு. எம். அபேரத்ன பண்டார**<br>(பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்) | **உறுப்பினர்** |
| **பேராசிரியர் எஸ். விதான பத்திரன**<br>(நுண் உயிரியற் துறை - களனிப் பல்கலைக்கழகம்) | **உறுப்பினர்** |
| **பேராசிரியர் நாரத வர்ணசூரிய**<br>(முன்னாள் உபவேந்தர் - சிரேஷ்ட பேராசிரியர்,<br>ஸ்ரீ ஜயவர்தனப்புரப் பல்கலைக்கழகம்) | **உறுப்பினர்** |
| **திரு. ஆர். எஸ். மெதகம**<br>(ஓய்வுபெற்ற பணிப்பாளர் நாயகம்,<br>கல்விச் சீர்த்திருத்த அமுல்படுத்தல் அலகு, கல்வி அமைச்சு) | **உறுப்பினர்** |
| **திரு. டப்ளியு. எம். என். ஜே. புஷ்பகுமார**<br>(பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்,<br>தேசிய மதிப்பீடுகள் மற்றும் பரீட்சைகள் சேவை) | **உறுப்பினர்** |
| **திரு. வீ. முத்துக்குமாரசுவாமி**<br>(முன்னாள் அதிபர், இந்துக் கல்லூரி - கொழும்பு 04) | **உறுப்பினர்** |
| **திரு. திஸ்ஸ ஹேவாவித்தான**<br>(ஆணையாளர் நாயகம்,<br>கல்வி வெளியீட்டுத் திணைக்களம், கல்வி அமைச்சு) | **உறுப்பினர்** |
| **திருமதி. டப்ளியு. பி. ஆர். சில்வா**<br>(உதவி சிரேஷ்ட ஆணையாளர், ஆசிரியர்க் கல்வி, கல்வி அமைச்சு) | **உறுப்பினர்** |
| **பேராசிரியர் சுதந்த லியனகே**<br>(பீடாதிபதி, விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்தனப்புரப் பல்கலைக்கழகம்) | **உறுப்பினர்** |
| **திரு. எல். எம். டி. தர்மசேன**<br>(ஆணையாளர், கல்வியியல் கல்லூரி, கல்வி அமைச்சு) | **உறுப்பினர்**<br>(30.10.2014 இலிருந்து) |
| **கலாநிதி பிரியந்த பிரேமகுமார**<br>(செயலாளர், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு) | **உறுப்பினர்**<br>(30.10.2014 இலிருந்து) |

**பேராசிரியர் பீ. சி. பி. ஜ.்.பர்** **உறுப்பினர்**
(பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மாற்றுக்கல்வி மற்றும் ஆசிரியர் கல்விப்பீடம்)

**வண. கலாநிதி மாபுல்கொட சுமனரத்ன தேரர்** **உறுப்பினர்**
(பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்)

**திரு. ஐ. எம். கே. பி. இலங்கசிங்க** **உறுப்பினர்**
(பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவப் பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்)

**திரு. எம். எப். எஸ். பி. ஜெயவர்த்தன** **உறுப்பினர்**
(பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
விஞ்ஞான தொழில்நுட்பப் பீடம், தேசிய கல்வி நிறுவகம்)

**திருமதி. வீ. டீ. சீ. பீ. பெரேரா** **கல்வி அலுவல்கள் சபையின் செயலாளர்**
(பணிப்பாளர், வெளியக வள முகாமைத்துவ அலகு,
தேசிய கல்வி நிறுவகம்)

## 2.3 பணிப்பாளர் நாயகத்தின் காரியாலயம்

பணிப்பாளர் நாயகத்தின் செயலகம், பரீட்சைகள் துறை, உள்ளகக் கணக்காய்வு அலகு, வெளியக வள முகாமைத்துவச் செயற்பாடுகள் என்பவற்றை மேற்கொள்வதற்காக, பணிப்பாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது.

பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகமானது நிறுவக பேரவையின் செயற்பாடுகள், கல்வி அலுவல்கள் சபையினதும் செயற்பாடுகள் என்பவற்றை ஒன்றிணைக்கின்றது. இந்தக் காலப்பகுதியில் 13 பேரவைக் கூட்டங்களும், 16 கல்வி அலுவல்கள் சபைக் கூட்டங்களும் இடம்பெற்ற அதேவேளை ஒன்றிணைந்த கூட்டங்கள் இரண்டும் இடம்பெற்றன.

உள்ளகக் கணக்காய்வு அலகானது உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதுடன் அகக் கட்டுப்பாடு, வெளிப்படுத்துகை என்பவற்றினூடாக நிறுவக முகாமைக்கு உதவி புரிகின்றது.

## 2.4 பீடங்களும் துறைகளும்

கீழே தரப்படும் பீடங்களினதும் துறைகளினதும் உள்ளடக்கங்களானவை தற்போதைய நிறுவக கட்டமைப்பிற்கமைவானவை. அதற்கமைய 2014 ஆம் ஆண்டில் நிறுவகக் கட்டமைப்பானது கீழ்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

### 2.4.1 மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை
சிங்கள மொழித்துறை
தமிழ் மொழித்துறை
ஆங்கில மொழித்துறை
அழகியற்துறை
சமயங்கள் துறை
சமூக, விஞ்ஞானங்கள் துறை

### 2.4.2 விஞ்ஞான தொழில்நுட்பப் பீடம்

விஞ்ஞானத்துறை
கணிதத்துறை
தொழில்நுட்பக் கல்வித்துறை
வணிகத்துறை
தகவல் தொழில்நுட்பத்துறை மற்றும் கல்வி முகாமைத்துவ தகவல் சேவை
சுகாதாரம் மற்றும் உடற்கல்வி அலகு
நூலக வெளியீட்டுத்துறை

### 2.4.3 திட்டமிடல், ஆய்வு மற்றும் ஆசிரியர் கல்விப் பீடம்

திட்டமிடல் மதிப்பீட்டுத் துறை
ஆய்வு மற்றும் அபிவிருத்தித் துறை
ஆசிரியர் கல்வித் துறை
நிறுவன அபிவிருத்தித் துறை
வெளியக வள முகாமைத்துவ அலகு

### 2.4.4 கல்வி தலைமைத்துவ முகாமைத்துவ அபிவிருத்திப் பீடம்

வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவத் துறை
கல்வி நிர்வாக அபிவிருத்தித் துறை
வெளிநாட்டு பாடநெறிகள் அலகு

### 2.4.5 மாற்றுக் கல்வி மற்றும் ஆசிரியர் கல்விப் பீடம்

அச்சகம் வெளியீடுகள் துறை
பாரம்பரிய, பிறநாட்டு மொழிகள் மற்றும் இரு மொழிக் கல்வித்துறை
வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் அலகு
திறந்த பாடசாலைகள் அலகு
உட்படுத்தற் கல்வித் துறை
ஆசிரியர் கல்வித் துறை
நிறுவன அபிவிருத்தித் துறை
இலத்திரனியல் பரவற் துறை

### 2.4.6 நிர்வாக, நிதி மற்றும் துணைச் சேவைகள் பிரிவு

நிதித்துறை
மனித வளங்கள் மற்றும் நிர்வாகத்துறை
பொறியியற் சேவைகள் மற்றும் பராமரிப்புத் துறை
நூலக மற்றும் அரும்பொருட் காட்சியகத் துறை
போக்குவரத்து அலகு

## 3.0 2014 ஆம் ஆண்டில் நிறுவகத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்

- 18 ஜுலை 2014 இல் வருடாந்த பிரித் வைபவம் இடம்பெற்றது.

- 2015 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்படவுள்ள புதிய கலைத்திட்டத்தை மாகாண அதிகாரிகளுக்கு அறிவூட்டம் செய்யும் இரண்டு விசேட செயலமர்வுகள் வடக்கு மற்றும் வடமேற்கு கல்விசார் அதிகாரிகளுக்காக நடாத்தப்பட்டன. இதில் 83 பேர் பங்குபற்றியிருந்தனர்.

- ஆற்றலை அபிவிருத்தி செய்வதற்காக, தேசிய கல்வி நிறுவக அதிகாரிகளுக்காக, ஆய்வு முறைமையியல் தொடர்பாக இரண்டு பாடநெறிகளும், உயர் கல்விக்காக அதிகாரிகளை தெரிவு செய்வதற்காக ஆங்கில மொழி பாடநெறியும் நடாத்தப்பட்டன.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இலங்கைத் தகைமை சட்டகத்திற்கமைவாக தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி முதுமாணி, கல்விமாணி பாடநெறிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

- கொரியாவின் ஹெங் யங் பல்கலைக்கழகத்தின் நிதியுதவியும் தெரிந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் சுகாதார மற்றும் உடற் கல்விச் செயற்பாடுகள் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

- தேசிய கல்வி நிறுவக அதிகாரிகள் கல்வி முதுமாணி மற்றும் கலாநிதி பட்டங்களை பயில்வதற்கு ஏதுவாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது. அதன் மூலம் மூவர் கல்வி முதுமாணி பாடநெறிக்கும் பத்து பேர் கலாநிதி பட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட்டனர்.

- க.பொ.த (சா.த) வகுப்புகளில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சித்தி பெறுவோரின் வீதத்தை அதிகரித்துக் கொள்வதற்காக, அடைவு மட்ட தர விருத்தி எண்ணக்கருக்களினூடான பரிசோதனை கருவிகளான வினாக்கள் மற்றும் வள நூல்களும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் - EKSP செயற்றிட்ட நிதி உதவியுடன் தயாரிக்கப்பட்டன.

## 4.0 கலைத்திட்ட அபிவிருத்தி

மொழிகள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடமும் விஞ்ஞான தொழில்நுட்ப பீடமும் நாட்டின் பொதுக் கல்வி தொடர்பான சகல விடயங்களுக்கும் பொறுப்பு வகிக்கின்றது.

மொழிகள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் கீழுள்ள ஏழு துறைகளினூடாகவும் விஞ்ஞான தொழில்நுட்ப பீடத்தின் கீழுள்ள 05 துறைகளின் மூலமும் சுகாதாரமும் உடற்கல்வியும் அலகின் மூலமும் 2014 ஆம் ஆண்டில் 68 செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

- சமூக, கலாசார, பொருளாதார, தொழில்நுட்பத் தேவைகளுக்குப் பொருத்தமான கலைத்திட்டத்தைத் திட்டமிடல், அபிவிருத்தி செய்தல், நவீனமயப்படுத்தல், கலைத் திட்டத்தில் புத்தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அர்த்தமுள்ளதும் செயன்முறை யானதுமான கற்றல், கற்பித்தல் செயன்முறைகளுக்காகப் புதிய நுணுக்கங்களை அறிமுகப்படுத்தல்.
- கலைத்திட்டத்தை விருத்திசெய்து அமுல்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவோரின் தொழிற் தேர்ச்சியை முன்னேற்றுதல்.
- கல்வியின் தரவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் ஆய்வுகளை அமுல்படுத்துவதற்கான கலைத்திட்ட விருத்தித் தகவல்களை வெளிக்கொணரல்.
- வெற்றிகரமான கற்றல், கற்பித்தல், மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்கான புதிய முறைமை களை அறிமுகப்படுத்தல்.
- தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம், தேசிய, சர்வதேச மொழிகளுக்குரிய மாணவர் களின் தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.
- பல்லின மக்கள் தொகுதி உள்ளதும், பல்சமய, பல மொழிகளுடையதுமான சமூகத்தின், சமூக, விழுமியங்கள், கலாசாரங்களை விளங்கிக் கொள்வதற்கான தேர்ச்சிகளை மாணவர்களிடையே விருத்தி செய்தல்.
- சமூக, கலாசார, பொருளாதார மற்றும் தொழினுட்பத் தேவைகளுக்கேற்பப் பொருளாதாரத்திற்கு பொருந்தக்கூடியதான கலைத்திட்டத்தை திட்டமிடல், விருத்தி செய்தல் மற்றும் நவீனமயப்படுத்தல்.

## 4.1 2014 ஆம் ஆண்டிற்காக, கீழ்வரும் நடவடிக்கைகள் கலைத்திட்ட அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்பட்டன.

- 7 மற்றும் 11 ஆம் தரங்களுக்கான 84 ஆசிரியர் வழிகாட்டிகளும், 2015 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்படவுள்ள 8 ஆம் தரத்திற்கான 35 பாடத்திட்டங்களும் தயாரிக்கப்பட்டன.
- சிங்கள மொழி பாடத்தின் தரத்தினை விருத்தி செய்வதற்காக, ''சிங்கள லெக்ஹன ரீத்திய'' வின் திருத்தம் பூரணப்படுத்தப்பட்டது.
- தரம் 6 தொடக்கம் 10 வரையிலான அழகியற் பாடங்களுக்கான 06 வளநூல்கள் தயாரிக்கப்பட்டன.
- க.பொ.த (உ.த) இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் கணித பாடங்களுக்கான திருத்தப்பட்ட வளநூல்கள் தயாரித்து முடிக்கப்பட்டிருத்தன.
- தகவல் தொடர்பாடற் தொழில் நுட்பத்திற்கான கலைச்சொற்களின் தொகுப்பு தயாரிக் கப்பட்டது.
- 7 000 சேவைக்கால, ஆசிரிய ஆலோசகர்கள், பாடப் பணிப்பாளர்கள், வளவாளர்கள், தெரிந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்கள் என்போருக்கு தற்பொழுதுள்ள பாடத்திட்டம் தொடர்பிலானதும் இற்றைப்படுத்தப்பட்ட புதிய கலைத்திட்டம் தொடர்பிலான பயிற்சி களும் அளிக்கப்பட்டன.
- ஆரம்பக்கல்வியின் கற்றல் - கற்பித்தல் தொடர்பிலான மொடியுலின் மூன்றாம் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டதுடன் மாகாணக் குழுக்களுக்கு பயிற்சிகளும் அளிக்கப் பட்டன.
- கணிதம் மற்றும் மொழி தொடர்பிலான பரிகாரக் கற்றலுக்கான ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்குரிய பயிற்சிகள் பூர்த்தி செய்யப்பட்டன.
- தரங்கள் 6 மற்றும் 11 என்பவற்றின் செயற்பாடுகளுக்குரிய இலத்திரனியல் கற்றற் சாதனங்கள் தயாரிக்கப்பட்டன.
- உயிரியல், பௌதிகம் மற்றும் இரசாயனவியல் பாடங்களுக்குரிய DVD களை தயாரிப்பதற்கான பிரதிகளை எழுதும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன.
- க.பொ.த (உ.த) தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடத்திற்கான ஆய்வொன்று நடத்தப்பட்டன.
- பொது தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழினுட்ப பாடங் களுக்கான வினா வங்கியொன்று நிறுவப்பட்டது.
- பொருளியல், வணிகக் கல்வி பாடங்களுக்கான 24 கற்கை பொதிகள் தயாரிக்கப் பட்டது.

- இரு மொழிக் கல்விக்கான 05 தகவற் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டன.
- க.பொ.த (சா.த) மாணவர்களுக்கான இலகு கணிதத்திற்கான 12 நூல்கள் தயாரிக்கப் பட்டதுடன் 10 000 பிரதிகள் பாடசாலை முறைமைக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.
- 10 மற்றும் 11 ஆந் தரங்களுக்குரிய கணித பாடத் தொடர்பில் மாணவர்களுக்குரிய பலம் மற்றும் பலவீனங்களை இனங்கண்டு கொள்வதற்கான ஆய்வொன்று நடாத்தப் பட்டது.
- 1 000 உருப்படிகளை உள்ளடக்கி க.பொ.த (சா.த) மாணவர்களின் வினா வங்கி யொன்று ஆரம்பிக்கப்பட்டது.
- பிறெயில் கல்வி தொடர்பிலான பாடநெறியொன்றை ஆரம்பிப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- உட்படுத்தற் கல்வி தொடர்பிலான சஞ்சிகையொன்று வெளியிடப்பட்டது.

**ஆசிரியர் வழிகாட்டிகள்**

**தரம் 6**

- பௌத்தம் (சிங்களம்) - தரம் 6
- கிறிஸ்தவம் (சிங்களம் / தமிழ்) - தரம் 6
- கத்தோலிக்கம் (சிங்களம் / தமிழ்) - தரம் 6
- செய்முறை மற்றும் தொழில்நுட்பத் திறன்கள் (சிங்களம் / தமிழ்) - தரம் 6
- இரண்டாம் மொழி (தமிழ்) - தரம் 6
- குடியியற் கல்வி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 6
- கீழைத்தேய சங்கீதம் (சிங்களம்) - தரம் 6
- நடனம் (சிங்களம்) - தரம் 6
- மேற்கத்தேய சங்கீதம் - தரம் 6
- சித்திரம் (சிங்களம் / தமிழ்) - தரம் 6
- நாடகமும் அரங்கியலும் (சிங்களம் / தமிழ்) - தரம் 6
- ஆங்கில மொழி - தரம் 6
- கணிதம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 6
- சைவநெறி (தமிழ்) - தரம் 6
- பரத நாட்டியம் (தமிழ்) - தரம் 6
- வரலாறு (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 6
- தமிழ்மொழியும் இலக்கியமும் (தமிழ்) - தரம் 6
- சிங்களமொழியும் இலக்கியமும் (சிங்களம்) - தரம் 6
- சுகாதாரமும் உடற்கல்வியும் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 6
- இஸ்லாம் (சிங்களம் / தமிழ்) - தரம் 6

**தரம் 7**

- பரத நாட்டியம் (தமிழ்) - தரம் 7
- இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்) - தரம் 7
- கத்தோலிக்கம் (சிங்களம் / தமிழ்) - தரம் 7
- சிங்களமொழியும் இலக்கியமும் (சிங்களம்) - தரம் 7
- ஆங்கிலமொழியும் இலக்கியமும் (ஆங்கிலம்) - தரம் 7
- பௌத்தம் (சிங்களம்) - தரம் 7
- இஸ்லாம் (தமிழ்) - தரம் 7
- தமிழ்மொழியும் இலக்கியமும் (தமிழ்) - தரம் 7
- கீழைத்தேய சங்கீதம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 7
- கிறிஸ்தவம் (சிங்களம் / தமிழ்) - தரம் 7
- சைவநெறி (தமிழ்) - தரம் 7
- நடனம் (சிங்களம்) - தரம் 7
- புவியியல் (சிங்களம் / தமிழ்) - தரம் 7
- நாடகமும் அரங்கியலும் (சிங்களம் / தமிழ்) - தரம் 7
- சுகாதாரமும் உடற்கல்வியும் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 7
- கணிதம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 7
- குடியியற் கல்வி (சிங்களம் / தமிழ்) - தரம் 7
- கர்நாடக சங்கீதம் (தமிழ்) - தரம் 7
- வரலாறு (சிங்களம் / தமிழ்) - தரம் 7
- இரண்டாம் தேசிய மொழி (தமிழ்) - தரம் 7
- விஞ்ஞானம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 7
- சித்திரம் (சிங்களம்) - தரம் 7

**தரம் 10**

- பௌத்தம் (சிங்களம்) - தரம் 10
- கிறிஸ்தவம் (சிங்களம் / தமிழ்) - தரம் 10
- சித்திரமும் கைப்பணியும் (சிங்களம் / தமிழ்) - தரம் 10
- மனைப்பொருளியல் (சிங்களம் / தமிழ்) - தரம் 10
- கடல்வாழ் உயிரினத் தொழினுட்பம் (சிங்களம் / தமிழ்) - தரம் 10
- வடிவமைப்பும் பொறியியற் தொழினுட்பமும் (சிங்களம் / தமிழ்) - தரம் 10
- வடிவமைப்பும் நிர்மாணத் தொழினுட்பமும் (சிங்களம் / தமிழ்) - தரம் 10
- வடிவமைப்பு மின் மற்றும் இலத்திரனியற் தொழில்நுட்பமும் (சிங்களம் / தமிழ்) - தரம் 10
- இரண்டாம் தேசிய மொழி (தமிழ்) - தரம் 10
- புவியியல் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 10
- குடியியல் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 10

- கீழைத்தேய சங்கீதம் (சிங்களம்) - தரம் 10
- நடனம் (சிங்களம் / தமிழ்) - தரம் 10
- மேலைத்தேய சங்கீதம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 10
- சித்திரம் (சிங்களம்) - தரம் 10
- நாடகமும் அரங்கியலும் (சிங்களம் / தமிழ்) - தரம் 10
- ஆங்கில மொழி - தரம் 10
- பாளி - தரம் 10
- சமஸ்கிருதம் - தரம் 10
- ஹிந்தி - தரம் 10
- சீன மொழி - தரம் 10
- ஜப்பானிய மொழி - தரம் 10
- ரஷ்ய மொழி - தரம் 10
- ஜெர்மனிய மொழி - தரம் 10
- சைவநெறி (தமிழ்) - தரம் 10
- பரதநாட்டியம் (தமிழ்) - தரம் 10
- வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) - தரம் 10
- சித்திரம் (தமிழ்) - தரம் 10
- கர்நாடக சங்கீதம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 10
- வரலாறு (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 10
- முயற்சியாண்மைக் கல்வி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 10
- தமிழ்மொழியும் இலக்கியமும் (தமிழ்) - தரம் 10
- தமிழ் இலக்கியமும் திறனாய்வும் (தமிழ்) - தரம் 10
- தகவல் தொடர்பாடற் தொழினுட்பம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 10
- சிங்கள மொழியும் இலக்கியமும் (சிங்களம்) - தரம் 10
- சுகாதாரமும் உடற்கல்வியும் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 10
- விஞ்ஞானம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 10
- இஸ்லாம் (சிங்களம் / தமிழ்) - தரம் 10
- விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் (சிங்களம் / தமிழ்) - தரம் 10

**தரம் 11**

- தமிழ்மொழியும் இலக்கியமும் (தமிழ்) - தரம் 11
- தமிழ் இலக்கியமும் திறனாய்வும் (தமிழ்) - தரம் 11
- கீழைத்தேய சங்கீதம் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்) - தரம் 11
- கத்தோலிக்கம் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- சிங்களமொழியும் இலக்கியமும் (சிங்களம்) - தரம் 11
- ஆங்கிலமொழியும் இலக்கியமும் (ஆங்கிலம்) - தரம் 11

- பௌத்தம் (சிங்களம்) - தரம் 11
- இஸ்லாம் (தமிழ்) - தரம் 11
- கிறிஸ்தவம் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- சைவநெறி (தமிழ்) - தரம் 11
- வடிவமைப்பும் பொறியியற் தொழினுட்பமும் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- வடிவமைப்பும் நிர்மாணத் தொழினுட்பமும் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- வடிவமைப்பு மின் மற்றும் இலத்திரனியற் தொழில்நுட்பமும் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- சித்திரமும் கைப்பணியும் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- நடனம் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- பரத நாட்டியம் (தமிழ்) - தரம் 11
- நாடகமும் அரங்கியலும் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- கணிதம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 11
- குடியியற் கல்வி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 11
- ஹிந்தி - தரம் 11
- ஜெர்மன் - தரம் 11
- சமஸ்கிருதம் - தரம் 11
- சீன மொழி - தரம் 11
- ஜப்பானிய மொழி - தரம் 11
- கொரிய மொழி - தரம் 11
- கர்நாடக சங்கீதம் (தமிழ்) - தரம் 11
- சித்திரம் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- விவசாயமும் உணவு தொழில்நுட்பமும் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- கடல்வாழ் உயிரின தொழில்நுட்பம் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- மனைப் பொருளியல் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- புவியியல் (சிங்களம் / தமிழ்) - தரம் 11
- தமிழ்மொழியும் இலக்கியமும் (தமிழ்) - தரம் 11
- தமிழ் இலக்கியமும் திறனாய்வும் (தமிழ்) - தரம் 11
- இரண்டாம் தேசிய மொழி (தமிழ்) - தரம் 11
- பாளி - தரம் 11
- வரலாறு (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 11
- ஆங்கில மொழி (ஆங்கிலம்) - தரம் 11
- மேற்கத்தேய சங்கீதம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 11

**தரம் 10 மற்றும் 11**

- சிங்கள இலக்கியத்தின் செய்யுட் தொகுப்பு - தரம் 10 மற்றும் 11
- வடிவமைப்பும் நிர்மாணத் தொழில்நுட்பமும் (சிங்களம்/ தமிழ்) - தரம் 10 மற்றும் 11
- வடிவமைப்பு மின் மற்றும் இலத்திரனியற் தொழில்நுட்பம் - தரம் 10 மற்றும் 11

**தரம் 12 மற்றும் 13**

- பொறியியற் தொழில்நுட்பம் (சிங்களம் / தமிழ்) - தரம் 12 மற்றும் 13
- உயிர் முறையியற் தொழில்நுட்பம் (சிங்களம் / தமிழ்) - தரம் 12 மற்றும் 13
- தொழினுட்பத்திற்கான விஞ்ஞானம் (சிங்களம் / தமிழ்) - தரம் 12 மற்றும் 13

**தரம் 8**

- கிறிஸ்தவம் (சிங்களம் / தமிழ்) - தரம் 8
- கத்தோலிக்கம் (சிங்களம் / தமிழ்) - தரம் 8
- இஸ்லாம் (தமிழ்) - தரம் 8
- சைவநெறி (தமிழ்) - தரம் 8
- இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்) - தரம் 8
- சிங்கள மொழியும் இலக்கியமும் (சிங்களம்) - தரம் 8
- சித்திரம் (சிங்களம் / தமிழ்) - தரம் 8
- கர்நாடக சங்கீதம் (தமிழ்) - தரம் 8
- இரண்டாம் தேசிய மொழி (தமிழ்) - தரம் 8
- தமிழ் மொழியும் இலக்கியமும் (தமிழ்) - தரம் 8
- வரலாறு (சிங்களம் / தமிழ்) - தரம் 8
- புவியியல் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) - தரம் 8

## 4.2 அழகியற் பாடங்களுக்காகத் தயாரிக்கப்பட்ட உசாத்துணை நூல்கள்

இதுவரையில் அழகியற் பாடங்களுக்காக பாடநூல்கள் எதுவும் தயாரிக்கப்படவில்லை என்பதால் மேலதிக நூல்களை தயாரிக்கப்பட வேண்டியதன் காரணமாக 2014 ஆம் ஆண்டில் இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

- சித்திரம் (சிங்களம் / தமிழ்) - தரங்கள் 6-10
- கர்நாடக சங்கீதம் (தமிழ்) - தரங்கள் 6-10
- கீழைத்தேய சங்கீதம் (சிங்களம்) - தரம் 10
- நடனம் (சிங்களம்) - தரம் 10
- மேற்கத்தேய சங்கீதம் (ஆங்கிலம்) - தரம் 10
- நாடகமும் அரங்கியலும் (சிங்களம் / தமிழ்) - தரங்கள் 6-10

**விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் கணிதம் தொடர்பில் தயாரிக்கப்பட்ட மேலதிக நூல்கள்.**

கீழ்வரும் உசாத்துணை நூல்கள் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பாடங்களுக்காக தயாரிக்கப்பட்டன.

- உயிரியல், பௌதிகவியல் மற்றும் இரசாயனவியலுக்கான மீட்டல் தரம் 12 மற்றும் 13.
- தரம் 12 மற்றும் 13 கணித பாடத்திற்கான மேலதிக வாசிப்பு சாதனங்கள் 8.
- பொது தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்காக தயாரிக்கப்பட்ட மாதிரி வினாத்தாள்.

**குறுங்கால கல்வி முகாமைத்துவத்திற்காக தயாரிக்கப்பட்ட மொடியுல்கள்**

- பாடசாலைகளின் பண்புசார் விருத்தியை உறுதிப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்ட நூல்கள்.
- பாடசாலையை முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.
- கல்வி தொடர்பிலான சட்டங்கள் (சிங்களம்)
- மனித வள முகாமைத்துவம் (சிங்களம்)
- கல்வி முகாமைத்துவத்தின் உளவியல் நோக்குகள்
- கலைத்திட்ட முகாமைத்துவம் (சிங்களம்)
- பாடசாலை அபிவிருத்தியை திட்டமிடல் (சிங்களம்)

**கணித பாடத்திற்காக தயாரிக்கப்பட்ட மேலதிக வாசிப்பு சாதனங்களும் மாதிரி வினாத்தாள்களும்**

- இணைந்த கணிதத்திற்கான மாதிரி வினாத்தாள்கள்.
- அட்சரகணிதம் (I மற்றும் II)
- நிகழ்தகவும் புள்ளிவிபரவியலும்
- இலகு கணிதம் - கேத்திரகணிதம் (சிங்களம் / தமிழ்)
- இலகு கணிதம் - தொடைகளும் நிகழ்தகவும் (சிங்களம் / தமிழ்)
- இலகு கணிதம் - புள்ளிவிபரவியல் (சிங்களம் / தமிழ்)
- இலகு கணிதம் - எண்கள் (சிங்களம் / தமிழ்)
- இலகு கணிதம் - அட்சரகணிதம் (சிங்களம் / தமிழ்)
- இலகு கணிதம் - அளவீடுகள் (சிங்களம் / தமிழ்)
- ஒப்படைகள்
- மாதிரி வினாத்தாள்கள் - தரம் 11

**இற்றைப்படுத்தப்பட்ட கலைத்திட்டம் தொடர்பில் பாடப் பணிப்பாளர்கள், அதிபர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக நடாத்தப்பட்ட அறிவூட்டம் செய்யும் நிகழ்ச்சிகள்.**

தற்போதைய கலைத்திட்ட சுற்றில் இற்றைப்படுத்தப்பட்ட கலைத்திட்டங்களாகிய தரம் 6 மற்றும் 10 ஆம் தரங்களுக்குரிய பாடங்களுக்கான பாடப் பணிப்பாளர்கள், அதிபர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான அறிவூட்டம் செய்யும் நிகழ்ச்சிகள் 2014 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதத்திற்கு முன் நிறைவு செய்யப்பட்டன. தேசிய கல்வி நிறுவகமானது மாகாணங்களிலிருந்து எழுந்த வேண்டுகோள்களுக்கிணங்க 2014 ஆம் ஆண்டிற்கு பின்னரும் இந்நிகழ்வுகளை நடாத்தியிருந்தது. இதன்படி பாடப் பணிப்பாளர்கள், அதிபர்கள், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்கள் என்ற வகையில் 9,307 பேருக்கு மாகாணங்கள் மற்றும் வலயங்கள் வாயிலாக அறிவூட்டம் செய்யும் நிகழ்வுகள் நடாத்தப்பட்டன.

## 5.0 கல்வி தலைமைத்துவ அபிவிருத்தியும் வாண்மை விருத்தியும்

கல்வித் துறையில் உள்ளோர்களின் வாண்மை விருத்தியினை மேம்படுத்துவது நிறுவகத்தின் பிரதான இலக்குகளில் ஒன்றாகும். இவ் வாண்மை விருத்தி மகரகம மற்றும் மீபே வளாகங்களில் முதுதத்துவமாணி பட்டம் தொடக்கம் சான்றிதழ் பாடநெறிகளை நடத்துவதன் ஊடாக வசதிப்படுத்தப்படுகின்றது.

மாகாண மட்ட நிலையங்களை தாபிப்பதனூடாகவும், நாட்டின் பல்வேறு பகுதிகளை சார்ந்த வளவாளர்களை ஈடுபடுத்துவதனூடாகவும் கல்விமாணி, பட்டப்பின்படிப்பு டிப்ளோமா மற்றும் மேலதிக மொழி விருத்தி பாடநெறிகள் நடத்தப்படுகின்றன.

இப்பாடநெறியின் விபரங்கள் யாவும் அட்டவணை 1 இல் குறிப்பிடப்படுகின்றன.

## அட்டவணை: 1 வாண்மை விருத்தி பாடநெறிகளின் விபரங்கள் 2014:

| பாடநெறிகள் | பொறுப்பான துறை | அமைவிடம் | பயிலுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| **பட்டப்பின் படிப்பு கல்விப் பாடநெறிகள்:** | | | |
| கல்வித் தத்துவமாணிப் பாடநெறி | ஆசிரியர்கல்வி | தே.க.நி. | 10 |
| கல்வி முதுமாணிப் பாடநெறி | ஆசிரியர்கல்வி | தே.க.நி/ யாழ்ப்பாண நிலையம் | 230 |
| எம். எஸ். சி. கல்வி முகாமைத்துவம் | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 50 |
| **பட்டப்பின் படிப்பு டிப்ளோமாப் பாடநெறிகள்:** | | | |
| பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (முழுநேர பாடநெறி) | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 80 |
| பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (பகுதிநேர பாடநெறி) | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 82 |
| பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா | ஆசிரியர்க் கல்வி | தே.க.நி + 24 பிரதேச நிலையங்கள் | 2377 |
| பட்டப்பின் கல்வி பாடசாலை வழிகாட்டல் டிப்ளோமா | ஆசிரியர்க் கல்வி | தே.க.நி. | 23 |
| **பட்டப் பாடநெறிகள்:** | | | |
| கல்விமாணி | ஆசிரியர்க் கல்வி | தே.க.நி + 38 பிரதேச நிலையங்கள் | 3969 |
| **டிப்ளோமாப் பாடநெறிகள்:** | | | |
| பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 187 |
| இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை கற்பிப்பதற்கான டிப்ளோமா | ஆங்கில மொழித்துறை | தே.க.நி. | 29 |
| முன்பிள்ளை பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா | ஆரம்பக் கல்வி | தே.க.நி. | 76 |
| விசேடக் கல்வி டிப்ளோமாப் பாடநெறி | உட்படுத்தற் கல்வி | தே.க.நி. | 53 |
| சைகை மொழி டிப்ளோமா | உட்படுத்தற் கல்வி | தே.க.நி. | 20 |
| **சான்றிதழ் பாடநெறிகள்:** | | | |
| மேலதிக மொழி விருத்திப் பாடநெறி (ALIC) | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 625 |
| **குறுங்காலப் பாடநெறிகள்:** | | | |
| கல்வி முகாமைத்துவம் தொடர்பான குறுங்காலப் பாடநெறி | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 726 |
| அதிபராண்மை பாடநெறி | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 785 |
| **பிறநாட்டு மாணவர்களுக்கான பாடநெறிகள்:** | | | |
| கல்வி முகாமைத்துவமாணி | வாண்மை விருத்தி மற்றும் கல்வி முகாமைத்துவம் | மீபே நிலையம் | 23 |

## 5.1 நிறுவன அபிவிருத்தி

தேசிய கல்வி நிறுவகமானது சேவைக்கு முன்னதான ஆசிரியர்களுக்கான தேசிய கல்வியியற் கல்லூரிகளினதும், சேவையிலுள்ள ஆசிரியர்களினதும் ஆசிரியர் கலாசாலைகளினதும் கலைத் திட்டத்திற்குப் பொறுப்பாக விளங்குகின்றது.

இக்காலப் பகுதியில்,

- சமூகவியல் தொடர்பாக 03 உசாத்துணை நூல்கள் தயாரிக்கப்பட்டன.
- தேசிய கல்வியியற் கல்லூரிகளினது 50 விரிவுரையாளர்களுக்காக அறிவூட்டம் செய்யும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

## 5.2 பரீட்சைகள்

2014 ஆம் ஆண்டின் ஜனவரி - டிசம்பர் வரையில் தேசிய கல்வி நிறுவகத்தின் பரீட்சைகள் துறையை வலுவூட்டுவது நிறுவகத்தின் பிரதான இலக்குகளில் ஒன்றாக இருந்தது. இக்காலப் பகுதியில் கீழ்வரும் முக்கிய நடவடிக்கைகள் நடந்தேறின.

**பின்வரும் 22 பரீட்சைகள் இவ்வருடத்தில் நடாத்தப்பட்டன.**

- மேலதிக மொழி விருத்தி பாடநெறி
- பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா
- விசேடக் கல்வி டிப்ளோமா
- சைகை மொழி டிள்ளோமா
- கல்வி முதுமாணி (நுழைவுப் பரீட்சை)
- விவசாயக் கல்வி டிப்ளோமா
- கல்வி முதுமாணி (இறுதிப் பரீட்சை)
- பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா - பகுதி II
- எம். எஸ். சி. தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம்
- பட்டப்பின் படிப்பு கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (முழுநேரம் - இறுதி)
- பட்டப்பின் படிப்பு பாடசாலை வழிகாட்டலும் ஆலோசனையும்
- இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை கற்பிப்பதற்கான டிப்ளோமா
- முன்பிள்ளை பருவ டிப்ளோமா
- கல்விமாணி (நுழைவுப்பரீட்சை)
- கல்வி முதுமாணி (நுழைவுப்பரீட்சை)
- கல்விமாணி (முகாமைத்துவம்) 2012/13 (வெளிநாட்டு) VI ஆம் அரையாண்டு
- ஜப்பானிய மொழியை பிறநாட்டு மொழியொன்றாக கற்பிப்பதற்கான டிப்ளோமாப் பரீட்சை
- கொரிய மொழியின் உயர் டிப்ளோமாப் பாடநெறிப் பரீட்சை - இரண்டாம் அரையாண்டு
- கொரிய மொழி டிப்ளோமா (முதலாம் அரையாண்டு)

**வேறு:**

- தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தொடர்பாடல் உத்தியோகத்தர்களுக்காக பரீட்சைகள் நடாத்தப்பட்டன.
- 2014 இல் தொழில்நுட்பவியல் பாடப் பிரிவிற்காக ஆசிரியர்களை தெரிந்தெடுப்பதற்கான பரீட்சைகள் நடாத்தப்பட்டன.

## 6.0 மாற்றுக் கல்வி

### 6.1 உட்படுத்தற் கல்வித்துறை

அனைவருக்கும் கல்வி வழங்கும் எண்ணக்கருவினை அமுல்படுத்துவதில் உட்படுத்தற் கல்வித் துறையானது முக்கிய பங்கினை கொண்டுள்ளது. விசேடத் தேவையுள்ள பிள்ளை களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியவாறு தற்போதுள்ள கலைத்திட்டத்திற்கு ஏற்றவாறு துறைசார்ந்த ஆசிரியர்களை சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களை பயிற்றுவிக்கும் பணிகளோடு உசாத்துணை நூல்களை தயாரித்தல் மற்றும் உட்படுத்தற் கல்வி தொடர்பான தும், சைகை மொழி தொடர்பான பாடநெறிகளை நடத்தலும் இத்துறையின் பிரதான பணிகளாகும்.

- விசேட கல்வி பயிலும் பிள்ளைகளுக்கு கற்றல் - கற்பித்தல் தொடர்பில் 80 ஆசிரியர்கள் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப் பட்டன.
- பிறெயில் கல்வி தொடர்பிலான பயிற்சி பொதி இற்றைப்படுத்தப்பட்டு மென் திறன்கள் தொடர்பாக 04 செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.
- புவியியல் பாடத்திட்டத்திற்கான சைகை மொழியின் கலைச் சொல் அகராதி தயாரிக்கப்பட்டது.
- விசேடக் கல்விக்கான சஞ்சிகையொன்று வெளியிடப்பட்டது.
- சமூக சேவைகள் அமைச்சிற்கு சைகை மொழி பாடநெறியை நடாத்துவதற்கான வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

### 6.2 இலத்திரனியல் பரவலாக்கம்

தேசிய கல்வி நிறுவகம் பாடசாலைக்கு வெளியேயுள்ள சமூகத்தினை கற்றலை நோக்கிய தாக இட்டுச் செல்வதற்கு முறைசாராத கவர்ச்சிகரமானதும் வினைத்திறனானதுமான கல்வித் தளங்களின் கற்பித்தலுக்கான இலத்திரனியல் சாதனங்களான, தொலைக்காட்சி, வானொலி, இறுவட்டு என்பவற்றை கல்வி - கற்பித்தல் சாதனங்களாக எடுத்துச் செல்வதற்கு தனது நகர்வினை மேற்கொண்டிருந்தது. இதன்படி கீழ்வரும் செயற்பாடுகள் 2014 டிசம்பர் மாதம் பூர்த்தியாகும் வரை நடந்தேறியிருந்தன.

- வாழ்க்கைத் தேர்ச்சிக்கான ஆங்கிலம் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆங்கில மொழியினை கற்பித்தல் தொடர்பில் 42 நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டன.

- நெனச தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக, 03 நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டதோடு 50 பிரதிகள் தயாரிக்கப்பட்டன.
- கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிக்கான, வீடியோ நிகழ்ச்சி யொன்று தயாரிக்கப்பட்டது.
- கல்வி அமைச்சின் கணித செயற்றிட்டத்திற்காக, 12 கணித நாடகங்கள் பதிவு செய்யப்பட்டன.
- 23 நிபுண நிகழ்ச்சிகள், 23 இது எமது பாடசாலை நிகழ்ச்சிகள், நடைமுறை விடயங்கள் தொடர்பான 23 நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன.
- 11 ''சுசர சன்ஹித'' நிகழ்ச்சிகள் ஒலிபரப்புகளுக்காக தயாரிக்கப்பட்டன.

## 6.3 வழிகாட்டலும் ஆலோசனையும்

கல்வி சமூகத்தினது உளவியற் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் அது தொடர்பில் அர்ப்பணிப்புடன் ஒன்றுபட்டு செயற்படுவதற்காக, 2006 ஜுன் மாதத்தில் தேசிய கல்வி நிறுவகத்தின் பேரவையின் அங்கீகாரத்துடன் வழிகாட்டல் ஆலோசனை அலகு நிறுவப் பட்டது. 2014 ஆம் ஆண்டில் இவ்வலகு கீழ்வரும் பணிகளை மேற்கொண்டிருந்தது.

- 78 பாடசாலை சிறார்கள் மற்றும் பெற்றோர்களுக்கான உள்ளக வழிகாட்டல் அமர்வுகள் நடாத்தப்பட்டன.
- பாடசாலை மட்டப் பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதற்கான 06 இடம் பெயர் பாடசாலை வழிகாட்டல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன் பாடசாலைகளின் வேண்டுகோள்களுக்கிணங்க 06 வழிகாட்டல் நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.
- பொதுத் தேவைகளுக்காக 03 வழிகாட்டல் விரிவுரைகள் நடத்தப்பட்டன.
- பயிற்சி சாதனமொன்றும் வழிகாட்டல் ஆலோசனைகளுக்கான 02 துணைச்சாதனங் களும் தயாரிக்கப்பட்டன.
- 50 ஆலோசகர் வழிகாட்டல் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.
- ஆலோசனையும் வழிகாட்டலும் பாடநெறிக்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டன.

## 6.4 திறந்த கல்வி

முறைக்கல்வியை பல்வேறுபட்ட காரணங்களினால் தவறவிட்டவர்களின் கல்வி வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு திறந்த பாடசாலைகள் துறை, தொலைக்கல்விப் பாடநெறிகளினூடாக அதனை மீளவும் வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ளது.

இக்கற்பித்தலானது, கல்வியை பயில்வு நாடிகளிடையே கொண்டு செல்வதற்காக, தொலை தூர மற்றும் திறந்த கல்வி அணுகுமுறைகளினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. பயில்வு நாடிகளின் கல்வித் தகைமைகளைக் கருதாது தொழில் அல்லது சமூகத் தேவைகளுக் கிணங்க தமக்குப் பொருத்தமான கற்றல், கற்றல் முறை, எந்நிலையிலிருந்தும் கற்றலை

ஆரம்பித்தல் என்பவற்றை தமக்கேற்றாற் போல் தெரிவு செய்வதற்கான வசதியையும், வாய்ப்பையும் திறந்த பாடசாலைகள் துறை வழங்கி வருகின்றது.

கடந்த வருடத்தில் இந்நிகழ்ச்சித் திட்டங்களினூடாக கீழ்வரும் திறந்த கற்றல் செயற்பாடுகள் நடந்தேறின.

- 02 திறந்த பாடசாலை பாடநெறிகள் நடாத்தப்பட்டன. (அத்திவாரம் மற்றும் இடைநிலைப் பாடநெறிகள்)
- குறித்த பாடநெறிகளுக்காக, 2 கற்றல் துணைச் சாதனங்கள் தயாரிக்கப்பட்டன.
- 40 போதனாசிரியர்களுக்காக ஆற்றலை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- 04 கண்காணிப்பு மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 7.0 ஆய்வு, திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

தரமான கல்வியை நோக்காகக் கொண்டு இயங்கும் தேசிய கல்வி நிறுவகம் கலைத்திட்ட அபிவிருத்தி, வாண்மை விருத்தி, பல்வேறுபட்ட ஆய்வுத் திட்டங்களினூடாக கொள்கைகளை வகுத்தல் போன்றவற்றுக்கு பங்களித்து வருகின்றது. இந்தப் பணிகளானவை ஆய்வு அபிவிருத்தித் துறை மற்றும் திட்டமிடல் மதிப்பீட்டுத்துறை, வெளியுறவு அலகு என்பவற்றி னால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 7.1 ஆய்வு அபிவிருத்தி

ஆய்வு அபிவிருத்தித் துறையானது கல்வி ஆய்வினை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்தல்; முன்னெடுத்தல்; கலந்துரையாடுவதற்கும் விபரிப்பதற்குமான கல்விப் பிரச்சினைகளுக்கான அடித்தளங்களை நிறுவுதல்; கல்வி ஆய்வுக்கான திறன்களை விருத்தி செய்து கொள்ள முனையும் துறைசார்ந்தவர்களுக்கு பாடநெறிகளை நடாத்தல்; உதவி வழங்குதல்; ஆய்வுத் தகவல்களை பகிரல் போன்ற பிரதான பணிகளை மேற்கொண்டு வருகின்றது. கடந்த ஆண்டில் கீழ்வரும் குறிப்பிடத்தக்க பணிகளை ஆய்வு அபிவிருத்தி துறையானது மேற் கொண்டிருந்தது.

- ஆரம்ப இடைநிலை பாடசாலை கலைத்திட்டத்தினை தேசிய பாரம்பரியங்களுடன் உள்நோக்கியதாக தயாரிக்கப்பட்ட ஆய்வின் இறுதியறிக்கை தயாரிக்கப்பட்டது.
- SAARC சஞ்சிகையின் 10 ஆம் அலகு தயாரிக்கப்பட்டது.
- தரம் 1 மற்றும் 2 மாணவர்களின் வருகை தொடர்பான ஆய்வொன்று நடாத்தப்பட்டது.
- சி. டப்ளியு. டப்ளியு. கன்னங்கர அவர்களின் நினைவுப் பேருரையானது கல்வி அமைச்சின் முன்னாள் உசாத்துணை ஆலோசகரான திரு. ஆர். எஸ். மெதகம அவர்களினால் ‘‘கன்னங்கர காலத்திற்கு பிற்பட்ட காலத்தில் இடம்பெற்ற கல்விச் சீர்திருத்தங்கள்’’ என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்டது.
- எதிர்கால கல்வி ஆய்வுகளின் செல்நெறிகள் தொடர்பில் தேவை பற்றிய ஆய்வு நடாத்தப்பட்டது.

## 7.2 திட்டமிடலும் மதிப்பீடும்

கிடைக்கக்கூடிய மனித பௌதிக வளங்களை வினைத்திறனாகவும் விளைத்திறனாகவும் பயன்படுத்தி தேசிய இலக்குகளுடன் இணைந்த வகையில் தேசிய கல்வி நிறுவகத்தின் இலக்குகளையும் அடைந்து கொள்ளத்தக்க வகையில் 2014 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகளை திட்டமிடல் மற்றும் மதிப்பீட்டு துறை நிறைவேற்றி இருந்தது.

- ஒவ்வொரு துறை மற்றும் அலகுகளுக்கும் தேவையான தளபாடம் அலுவலக உபகரணங்களின் பட்டியல்களைத் தயாரித்து அதனை வழங்கல் துறைக்கு கையளிப்புச் செய்தமை.
- 2013 ஆம் ஆண்டிற்கான தற்போதைய அடைவுகள் அறிக்கை தயாரிக்கப்பட்டது.
- 2012 ஆம் ஆண்டின் தற்போதைய அடைவுகளின் அறிக்கை தயாரிக்கப்பட்டது.
- 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த முன்னேற்ற அறிக்கையினை தயாரித்தல், 2013 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டங்கள், காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் 03, 2016 - 2019 ஆண்டுக்கான ஐந்தாண்டுத் திட்டம், 2015 ஆம் ஆண்டிற்கான பாதீடு மற்றும் வருடாந்த அமுலாக்கல் திட்டம் 2015 என்பனவற்றை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
- மத்திய வங்கி, கல்வியமைச்சு, தகவல் தொடர்பாடல் நிறுவகம், பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு என்பவற்றின் வேண்டுகோள்களுக்கிணங்க முன்னேற்ற அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

## 7.3 வெளியுறவு முகவரலகு

வெளியுறவு முகவரலகு பணிப்பாளர் நாயகத்தின் செயலகத்தின் கீழ் இயங்கி வருகின்றது. இது ஊழியர் அபிவிருத்திக்கான வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்து வருகின்றது. இதைவிட உலக வங்கியினால் ஒருங்கிணைக்கப்படுகின்ற செயற்றிட்டங்களான ESDG, ஆசிய அபிவிருத்தி வங்கியின் EKSP, GIZ நிறுவனத்தின் சமூக நல்லிணக்கம் மற்றும் அனர்த்த முகாமைத்துவம், யுனிசெப் நிறுவனத்தின் அடிப்படை மற்றும் ஆரம்பக்கல்வி என்பவற்றுக்குப் பொறுப்பாக விளங்கும் அலகாகும். கீழ்வரும் அடைவுகள் 2014 ஆம் ஆண்டில் எய்தப்பட்டன.

- 17 அதிகாரிகளுக்கு வெளியுறவு முகவரலகு வெளிநாட்டில் குறுங்கால செயலமர்வுகள், கருத்தரங்குகள் போன்றவற்றில் பங்குபற்றுவதற்கான வெளிநாட்டு வாய்ப்புக்களை வழங்கியிருந்தது.
- தேசிய கல்வி நிறுவகமும் மலாயா பல்கலைக்கழகமும் ஏற்படுத்திக் கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் கல்விசார் பணியணியினரின் வாண்மை விருத்திக்காக முதுமாணி மற்றும் கலாநிதி பட்டப்படிப்பு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன. இதன் ஆரம்ப கட்டமாக 03 தேசிய கல்வி நிறுவக அதிகாரிகள் முதுமாணிக் கற்கை நெறியை தொடர்வதற்காக மலாயா பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர்.

- 10 கல்வி சார் அதிகாரிகள் மலேசியாவின் MSU பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான வசதிகள் அளிக்கப்பட்டதுடன் இதற்கான நிதியுதவியை ஆசிய அபிவிருத்தி வங்கியும் உலக வங்கியும் வழங்கி வருகின்றது.

## 8.0 நிர்வாகம், நிதி மற்றும் துணைச்சேவைகள்

நிர்வாகம், நிதி மற்றும் துணைச்சேவைகள் பிரிவின் பணியானது நிதி, பௌதிக, முகாமைத்துவ சேவைகளையும், துணைச் சேவைகளையும், கலைத்திட்ட அபிவிருத்தி, வாண்மை விருத்தி, மாற்றுக் கல்வி, ஆய்வுத் திட்டமிடல் அபிவிருத்தி போன்ற பீடங்களுக் காகப் பெற்றுக் கொடுப்பதாகும். நிர்வாகத் துறையானது நிர்வாகம், நிதி மற்றும் துணைச் சேவைகள் பிரிவின் ஒரு பிரிவாக இயங்கி வருவதுடன் இது சகல நாளாந்த நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்குப் பொறுப்பாக உள்ளது. அத்தோடு ஊழியர்களின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு அவர்களுக்கு அவசியமான பயிற்சிகளை உள்நாட்டில் வழங்குகின்றது.

- ஒவ்வொரு பதவிக்குமான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தீர்மானிப்பட்டுள்ளதுடன் ஆட்சேர்ப்புத் திட்ட தயாரிப்பும் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

**கீழ்வரும் ஆட்சேர்ப்புகளும் பதவி உயர்வுகளும் 2014 ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் பூரணமாக்கப்பட்டிருந்தன.**

### 8.1 ஆட்சேர்ப்புகள்:

| | | |
|---|---|---|
| சிரேஷ்ட விரிவுரையாளர் / கல்வியியலாளர் | - | 01 |
| உதவி விரிவுரையாளர் / உதவி கல்வியியலாளர் | - | 26 |
| முகாமைத்துவ உதவியாளர்கள் | - | 06 |
| சாரதிகள் | - | 03 |
| அலுவலக உதவியாளர் | - | 03 |
| உதவிப் பணிப்பாளர் (நிதி) | - | 01 |
| ஊடக தொழினுட்பவியலாளர் | - | 02 |
| கணினி வரைபக வடிவமைப்பாளர் | - | 01 |
| கணக்கு பதியுநர் | - | 01 |
| நூலக உதவியாளர் | - | 02 |
| கணக்காய்வு உதவியாளர் | - | 02 |

- கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு நிதி உதவிகளும் கற்கை விடுமுறை களும் வழங்கப்பட்டன.

  19 ஆளணியினர் நிறுவனத்தின் பல்வேறு பதவிகளுக்கு பதவி உயர்த்தப்பட்டனர்.

## 8.2 நிதித்துறை

நிதித்துறையானது அனைத்து தேவைகளுக்குமான நிதி வளங்களை வழங்குதல், வருமானச் செலவின அறிக்கைகளை நிதிப் பிரமாணங்களுக்கமைய பேணி அறிக்கையிடல் என்பவற்றை மேற்கொள்கின்றது.

- நிலையான சொத்துக்களின் பதிவும் மதிப்பீட்டு நடைமுறைகளும் தயாரித்து முடிக்கப் பட்டிருந்தன.
- 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன.
- 2014 ஆம் ஆண்டிற்கான பொருட் கணக்கெடுப்பு பணிகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன.

## 8.3 பொறியியற் சேவைகள் மற்றும் பேணுகைத் துறை

பொறியியற் சேவைகள் துறையானது கல்விச் செயற்பாடுகளுக்கு அவசியமான பௌதிகச் சூழலைப் பேணுவதும் நிறுவகத்தின் கட்டட நிர்மாணம் பேணுகைப் பணிகள், மின்சார தொலைபேசிச் சேவைகள் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஒதுக்கீடுகள், துப்பரவாக்கல், பாதுகாப்புச் சேவைகளை ஒருங்கிணைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது. 2014 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

- தேசிய கல்வி நிறுவகத்தின் நீர் வழங்கல் முறைமை மறுசீரமைக்கப்பட்டது.
- பிரதான கேட்போர் கூடம் மறுசீரமைப்புச் செய்யப்பட்டது.
- மகரகம, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் மீபே வளாகங்களின் 31 பேணுகைப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## 8.4 நூலகம்

நிறுவன ஆளணியினரைத் தவிர தேசிய கல்வி நிறுவகத்தின் நூலகமானது பல்கலைக்கழக பணியணியினர்கள், தேசிய கல்வியற் கல்லூரிகளினதும் ஆசிரியர் கலாசாலைகளினதும் பணியணியினர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஏனைய கல்வியியலாளர்கள் என்ற வகையில் எல்லோரினதும் கல்வி நோக்கங்களுக்காகவும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப் பட்டு வருகின்றது. 2014 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் நூலக முறைமையின் தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக, கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- **பின்வரும் நூல்களும் இறுவட்டுகளும் 2014 ஆம் ஆண்டில் புதிதாக நூலகத்திற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டன.**
  - புத்தகங்கள் - 1846
  - புத்தகங்கள் (நன்கொடைகள் மூலம்) - 128
  - கலைத்திட்ட சாதனங்கள் - 1156
  - கல்வியறிக்கைகள் - 129
  - உள்நாட்டுச் சஞ்சிகைகள் (நன்கொடைகள் மூலம்) - 15
  - வெளிநாட்டுச் சஞ்சிகைகள் (நன்கொடைகள் மூலம்) - 10

**8.5 கீழ்வரும் வெளியீடுகள் அச்சுப் பதிப்பு வெளியீடுகள் பிரிவினால் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.**

- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள் - 20
- மேலதிக நூல்கள் - 140
- ஏனைய கற்றல் சாதனங்கள் - 71
- சான்றிதழ்கள் - 15
- மொடியுல்கள் (மேலதிக வாசிப்பிற்கு) - 06
- பாடத் திட்டங்கள் - 44

ஆளணியினரின் பற்றாக்குறைக்கு மத்தியிலும் தற்போதைய ஆளணியின் தொடர்ச்சியான ஈடுபாட்டினால் பல்வேறு பிரச்சினைகளோடு பாராளுமன்ற சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள தொழிற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 652 அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஆளணியில் 188 வெற்றிடங்கள் இன்னும் நிரப்பப்படாமலுள்ளது. இது பற்றி கீழ்வரும் அட்டவணை 2014 ஆரம்பத்தில் இருந்தவாறான ஆளணி நிலைமையை எடுத்துக்காட்டுவதாயிக்கும்.

| பதவி | அங்கீகரிக்கப் பட்ட ஆளணி (01.01.2014 இல்) | தற்போதைய ஆளணி (01.01.2014) | | | வெற்றிடங்களின் எண்ணிக்கை (01.01.2014 இல்) |
|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | மொத்தம் | |
| பணிப்பாளர் நாளகம் | 01 | 01 | 00 | 01 | 00 |
| மேலதிக பணிப்பாளர் நாயகம் | 01 | 00 | 00 | 00 | 01 |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் | 06 | 06 | 00 | 06 | 00 |
| பணிப்பாளர் | 27 | 11 | 06 | 17 | 10 |
| சபைச் செயலாளர் (கல்வி) | 01 | 00 | 00 | 00 | 01 |
| சிரேஷ்ட விரிவுரையாளர் / சிரேஷ்ட கல்வியியலாளர் | 72 | 27 | 14 | 41 | 31 |
| விரிவுரையாளர் / கல்வியியலாளர் | 75 | 28 | 29 | 57 | 18 |
| உதவி விரிவுரையாளர் / உதவி கல்வியியலாளர் | 90 | 13 | 16 | 29 | 61 |
| கல்விசாராத ஊழியர்கள் | 379 | 154 | 159 | 313 | 66 |
| **மொத்தம்** | **652** | **240** | **224** | **464** | **188** |

21 ஆளணியினர் ஓய்வு பெறக்கூடிய நிலையில் உள்ளபோதும் புதியவர்களை ஆட்சேர்ப்பதற்காகவுள்ள கடுமையான வரையறைகளின் காரணமாக ஆளணி பற்றாக்குறையை மேலும் சிக்கலாக்கியுள்ளது. நிறுவக நோக்கத்தை அடைந்துக் கொள்வதில் தற்போதுள்ள ஆளணியின் அதிஉச்ச அர்ப்பணிப்பும் செயலூக்கமும் மேலும் மெருகூட்டப்பட வேண்டிய அதேவேளை தேசிய கல்வி நிறுவகத்தின் 2014 ஆம் ஆண்டின் இலக்குகள் எய்தப்பட வேண்டியுள்ளனவாயிருந்தன.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ஈசீ/ஐ/என்ஜஈ/01/14/09 මගේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2015 ஆகஸ்ட் 21

பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.

**தேசிய கல்வி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

தேசிய கல்வி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2014 யூன் 22 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கல்வி நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் உட்பாய்ச்சலினை பிரதிபலிக்கும் வகையில் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டுமெனினும் நிறுவகத்திற்கு அரச மானியங்களின் கீழ் நிதி அல்லாத சொத்தொன்றாக பெறப்பட்ட ரூபா 8,500,000 பெறுமதியான வாகனத்தின் பெறுமதியானது காசுப்பாய்சலொன்றாக கருதப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பந்தியின் பிரகாரம் இருப்பு கிரயம் மற்றும் தேறிய இற்றைப் பெறுமதி ஆகிய இரு பெறுமதிகளில் குறைந்த பெறுமதிக்கு கணிப்பிடப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ரூபா 21,227,878 வெளிப்படுத்தப்பட்ட இருப்பினுள் ரூபா 3,537,939 இலாபம் உள்ளடக்கப்பட்ட காரணத்தால் இருப்பு அத் தொகையால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்ளைகள்

நிலையான சொத்து விற்பனை மூலம் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் ஆண்டுக்கான இலாபத்துடன் சீராக்கம் செய்யப்பட வேண்டுமெனினும், நிறுவகத்தின் நிலையான சொத்துக் கைத்தவிர்ப்பு மூலம் ஏற்பட்ட இலாபம் கைத்தவிர்ப்பு இலாப நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்ட காரணத்தால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் அதன் மீதி ரூபா 3,640,844 ஆக இருந்தது.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கட்டளையிடுதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 31,569,002 பெறுமதியான பொருட்களின் கிரயமானது அட்டுறு செலவினம் மற்றும் வழியிலுள்ள இருப்பின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள 04 நிலையான சொத்துக் கணக்குகளின் மீதிகளை குறித்த படடோலைகளுடன் இணக்கம் செய்த போது ரூபா 5,390,441 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

நிறுவகத்தின் கடன்பட்டோர் மீதியினுள் 06 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலவிவரும் 05 கடன் மீதிகளின் கூட்டுத்தொகையானது ரூபா 3,747,754 ஆகும். இதற்காக போதிளவிலான ஐயக்கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371 | (i) செயல்நிமித்த உப கட்டுநிதியானது அது வழங்கப்பட்ட செயற்பாடு முடிவடைந்ததும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டுமெனினும் தேசிய கல்வி நிறுவகத்தினால் 17 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 649,150 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதியினை தீர்ப்பனவு செய்தல் 01 முதல் 10 மாதங்கள் வரையான காலதாமதத்திற்கு உட்பட்டிருந்தது.<br><br>(ii) செயல்நிமித்த உப கட்டுநிதியினை ரூபா 20,000 எல்லையினுள் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியுமெனினும், திறைசேரியின் அங்கீகாரமின்றி நிறுவகத்தினால் அவ் எல்லையினை விஞ்சி செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்ததுடன் 32 பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கட்டுநிதி வழங்கிய போது 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான உச்ச மதிப்பீட்டின் அடிப்படையில் ரூபா 1,178,750 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை

(i). IV அத்தியாயத்தின் 3.3 பிரிவு

நிரந்தர ஊழியர் எண்ணிக்கையில் வெற்றிடமொன்றை நிரந்தர அடிப்படையில் நிரப்பும் வரை அமைய உத்தியோகத்தரொருவர் அப்பதவிக்கு ஆட்சேர்க்கப்பட கூடாதெனினும், அதற்கு முரணாகவும் கட்டுப்பட்டுச் சபையின் அங்கீகாரத்தினை முறையாகப் பெற்றுக்கொள்ளாமலும் நிறுகத்தின் வெற்றிடங்களுக்காக துண்டுக் கூலி அடிப்படையில் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்த 28 உத்தியோகத்தர்களின் சேவை 2013 ஆம் ஆண்டிலிருந்து சேவை நிரந்தரமாக்கப்பட்டிருந்தது.

(ii). IV அத்தியாயத்தின் 3.3 ஆம் பிரிவு

ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு இணங்க சேவை அனுபவம் இல்லாத ஒருவர் 2012 பெப்ரவரி 21 ஆம் திகதி பயிற்சி அடிப்படையில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டு பின்னர் 2013 திசெம்பர் 07 ஆம் திகதியிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் நிறுவகத்தின் நிர்வாக உத்தியோகத்தராக ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். 09 மாதங்கள் கடந்த நிலையில் பதவிக்குரிய ஆட்சேர்ப்புக்காக பத்திரிகை அறிவித்தலொன்று 2014 செப்தம்பர் 02 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்ததுடன் பதவிக்காக மிகவும் உயர்ந்த தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் முறையான ஆட்சேர்ப்பொன்றினை மேற்கொள்வதில் நிறுவகம் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 59,317,999 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 36,496,150 ஆகக் காணப்பட்டது. இதன் படி நிதி விளைவுகளில் ரூபா 22,821,849 தொகையான சாதகமான நிலை காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இம் முரணிற்கு உள்நாட்டு வைப்பு வருமானம் ரூபா 117,128,348 ஆல் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தது.

### 3.2 நிறுவகத்தினால் அல்லது நிறுவகத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டிருந்த சட்ட நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் கல்விசார் நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்ற உடன்படிக்கையை மீறிய 06 உத்தியோகத்தர்களுக்கு எதிராக ரூபா 12,215,387 கூட்டுத்தொகையான நட்டஈடு கோரி நீதிமன்றங்களில் 06 வழக்குகள் தொடரப்பட்டிருந்ததுடன், அவற்றில் ஒரு வழக்குத் தீர்ப்பின் பின்னர் ரூபா 14,604 படி ரூபா 876,236 பெறுமதியான 60 தவணைகளில் செலுத்தி முடிப்பதற்கு கட்டளையிடப்பட்டிருந்தது.

(ஆ) ஒழுக்கக்கேடான நடத்தையின் காரணமாக சேவையிலிருந்து பதவியிறக்கப்பட்ட 04 நபர்களால் ஆசிரியர் பயிற்சி சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பில் நிறுவகத்திற்கெதிராக நீதிமன்றங்களில் 04 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேசிய கல்வி நிறுவகம் தாபிக்கப்பட்டிருந்த ரூபா 78,600,000 பெறுமதியான 7.0958 ஹெக்டேயர் அளவான தென்னகெலே வத்த காணி மற்றும் மீபே ஆசிரியர் பயிற்சி நிலையம் தாபிக்கப்பட்டுள்ள ரூபா 65,000,000 பெறுமதியான பதுவத்த (கஹட்டஹேன) காணி என்பவற்றை நிறுவகத்திற்கு முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மலசல கூட கட்டமைப்பொன்றினை நிர்மாணிப்பதற்கான மதிப்பீடொன்றினைத் தயாரிப்பதற்காக மதியுரை கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டு, மதியுரைக் கட்டணமாக ரூபா 1,200,949 தொகை செலுத்தப்பட்டு 07 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அதன் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இக் கொடுப்பனவினை கணக்குகளில் பதிவழிப்பதற்கு தேசிய பாதீட்டுத் திணைக்களத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் தரம் 06 முதல் தரம் 10 வரையான பாடசாலை பாடதிட்டத்திற்கு இணங்கும் வகையில் ஆசிரியர்களுக்கான கணிப்பீட்டு உபகரணங்களாக 124,000 நூல்கள் அச்சிடப்பட்டிருந்தெனினும் கணக்காய்வு திகதியாகிய 2014 திசெம்பர் 15 ஆந் திகதி வரையிலும் 27 பாடங்களுக்குரிய ரூபா 5,873,491 பெறுமதியான 81,416 நூல்களை ஆசிரியர்களிடையே பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஒக்தோபர் மாதம் தரம் 06 இற்காக அச்சிடப்பட்ட 18 பாடங்களுக்குரிய 43,979 ஆசிரியர் வழிகாட்டி கைநூல்களில் ரூபா 6,591,677 பெறுமதியான 36,308 ஆசிரியர் வழிகாட்டி கைநூல்கள் அல்லது 82 சதவீதம் 04 வருடங்களாக ஆசிரியர்களிடையே பகிர்ந்தளிப்பதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டு முதல் தரம் 06 இற்குரிய பாடத்திட்டம் திருத்தப்பட்டமையின் காரணத்தால் இந் நூல்கள் பாவனைக்குட்படுத்தப்படாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) நிறுவகத்தின் தேவைப்பட்டிற்கமைய முன் அனுமதியின்றி பணிப்பாளர் நாயகத்தின் வாய்மொழிமூல ஆலோசனைகளின் அடிப்படையில் அவசர அத்தியாவசிய கொள்வனவொன்றாக குறிப்பிடப்பட்டு நேரடி கொள்வனவின் கீழ் மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதத்தில் ரூபா 2,195,200 தொகை செலவிடப்பட்டு 400 விரிவுரை மண்டப கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டு பல்வேறு பிரிவுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததெனினும் முறையான பாவனைக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அறிவுக்கூடத்தின் அடிப்படையில் பாடசாலை கல்வி முறைமையினை மீள் வடிவமைக்கும் செயற்திட்ட நிதியத்தினை (TESP) பயன்படுத்தி அந் நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணாக பின்வரும் செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(அ) பணம் அறவிடப்பட்டு நடாத்தப்படும் பல்வேறு பட்டப் பாடநெறிகளுக்காக வழங்கப்படுகின்ற 8,000 சான்றிதழ் பத்திர குழல்களை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதத்தில் ரூபா 1,315,130 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அதிபர்களுக்கு பயிற்சியளிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றில் பகிர்ந்தளிப்பதற்கு மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதத்தில் 1,000 தரவு களஞ்சியங்களை (Pen Drive) கொள்வனவு செய்வதற்காக ரூபா 703,800 செலவிடப்பட்டமை.

## 4.4 நிதியத்தின் குறைப்பயன்பாடு

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 8,750,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்ததெனினும் 2015 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் எதுவித ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகவும் நிதியானது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

தேசிய கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்து பரீட்சை சான்றிதழ் பத்திரங்களுக்காக பொதுவான சான்றிதழொன்றினை அச்சிடுவதற்கு அச்சகத்திற்கு வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் அச்சிடப்பட்ட வழுக்களடங்கிய மாதிரி சரியானதென நிறுவகத்தின் பணிப்பாளரொருவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 1,450 சான்றிதழ் பத்திரங்களின் அச்சிடலுக்காக ரூப 85,112 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 652 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 462 ஆகவும் இருந்தமையால் 190 ஊழியர் வெற்றிடங்கள் காணப்பட்டன. ஒவ்வொரு திணைக்களத்தினதும் தேவைப்பாட்டின் அடிப்படையில் அவசியமான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையினை அங்கீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிறுவகத்தின் திருத்தப்பட்ட பாதீடு கணக்காண்டு முடிவடைந்து 04 மாதங்கள் கடந்த நிலையில் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் கீழ் கணக்காய்விற்கு 2015 மே 08 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட பாதிடப்பட்ட செலவினங்களை உள்ளவாறான செலவினங்களுடன் இணக்கஞ் செய்யும் போது 24 சதவீதம் முதல் 101 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தியிராமை அவதானிக்கப்பட்டது.

### 5.2 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது 2009 யூன் 01 ஆம் திகதிய 30 (I) மற்றும் 30 (II) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவகத்தின் பதவிநிலை தவிர்ந்த மற்றைய உத்தியோகத்தர்களின் வேதனங்களை மாற்றிய போது 29 உத்தியோகத்தர்களுக்காக 2009 சனவரி 01 முதல் 2014 ஏப்ரல் 30 வரை ரூபா 1,209,220 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அதன் அடிப்படையில் ரூபா 156,684 தொகையான ஊழியர் சேமலாப நிதி அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாக முன்னைய ஆண்டின் அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்ததெனினும் அதனை 2015 யூன் 22 ஆந் திகதி வரையிலும் செம்மைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) பதவியணியினர் முகாமைத்துவம்
(ஆ) கல்வி வெளியீடுகளை பகிர்ந்தளித்தல்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) கணக்கீடு
(உ) கொள்வனவு நடைமுறை
(ஊ) இருப்பு கட்டுப்பாடு

ஒப்பம்: டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்).

*Tc*

## தேசிய கல்வி நிறுவகத்தின் 2014 - டிசம்பர் 31ம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்குரிய நிதிக்கூற்று தொடர்பாக, 1971 இன் 38 ஆம் இலக்க நதிச்சட்டத்தின் 14(2) (சீ) உறுப்புரையின்படி கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொள்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் தற்போதைய நிலைமைகளும்

**விளக்கமளித்தல்கள்.**

**2.2 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாகக் கருத்து தெரிவித்தல்.**

**2.2.1 இலங்கை அரச துறைக் கணய்காய்வு நியமங்கள்**

(அ) ஏற்றுக்கொள்கின்றேன்.
2015 இன் கணக்குகள் தயாரிக்கும்போது திருத்தஞ் செய்ய நடவடிக்கை எடுப்பேன்.

**தற்போதைய நிலைமை**

- குறித்த திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) மேற்படி சீராக்கலை 2015 நிதி ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் ஆரம்ப மீதியை மீள்தாபித்தல் மூலம் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**தற்போதைய நிலைமை**

- 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்களில் திருத்தங்கள் செய்யப்படவில்லை. 2017 கணக்காண்டின் ஆரம்ப மீதியை மீளத் தாபித்தல் மூலம் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

ஏற்றுக்கொள்கின்றேன்.

இதற்கான அனுமதியைப் பெற்று 2015 ஆம் ஆண்டுக் கணக்குகளில் சீராக்கஞ் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

**தற்போதைய நிலைமை**

- 2015 ஆம் 2016 ஆம் ஆண்டுகளில் திருத்தங்கள் செய்யப்படவில்லை. 2017 ஆம் ஆண்டு கணக்குகளில் இச்சீராக்கம் செய்யப்படும்.

**2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் மாதிரிச் சட்டகத்தின்படி, அட்டுறு அடிப்படையில் நிதி அறிக்கைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கமைய கணக்காண்டின் இறுதித் தினத்துக்கு, நிறுவனத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிணைப்புக்களும் கணக்குகளில் அடக்கப்படுதல் வேண்டும். அதற்கமைய நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை.

தற்போதைய நிலைமை

- மேற்படி பதில் பொருத்தமானது.

**2.2.4 இணக்கஞ் செய்யாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்:**

**இயந்திர உபகரணங்கள்**

கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பட்டியல்களுள் இயந்திரோபகரணப் பட்டியல்கள், முன்னைய கணக்காட்டு மீதிகளுடன் இணங்குவதோடு, குறித்த பட்டியல்கள் அரச கணக்காய்வுப் பிரிவுக்கு ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**ஒளிப்பிரதி உபகரணங்களும் தளபாடங்களும்**

- ஒளிப்பிரதி உபகரணங்கள், தளபாடங்கள் ஆகிய பட்டியல்களில் 2014 இல் நீக்கிய சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, அதன் தாக்கத்தை நீக்கியவுடன் பட்டியல்களும் பேரேட்டுக் கணக்கு மீதியும் இணங்குகின்றன.

**கணினிகளும் துணைக்கூறுகளும்**

- இந்த இணக்கப்பாட்டுக்காக, கணினிமயப்படுத்தப்பட்ட சொத்துப் பட்டியல்களே பயன்படுத்தப்பட்டுள்ளன. எனினும் கணினியும் துணைக் கூறுகளும் இதற்காக பேணிவரப்படும். கணினிமயப்படுத்தியுள்ள பட்டியல்கள் இற்றைப்படுத்தப்படாத போதிலும் அதற்காக பேணிவரப்படும் ஆண்டுகளின் புதிய சொத்துக்கள் கொள்வனவு ஏடுகளின் கூட்டுத்தொகையுடன் பேரேட்டுக் கணக்கு இணங்குகின்றது.

**தற்போதைய நிலைமை**

- பட்டியல்கள் திருத்தப்பட்டு, அரச கணக்காய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**2.3 கிடைக்க வேண்டிய, செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்**

கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வின்போது ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை 3,769,923 ரூபா என்பது உறுதியாகியதோடு அதன் பகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| | | ரூபாய் |
|---|---|---|
| 1. | கல்வி அமைச்சு | 3,237,799.66 |
| 2. | பீ. ஆர். எம். தயானந்த | 124,889.90 |
| 3. | தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனம் | 318,500.00 |
| 4. | எஸ். சமரவீர | 28,302.00 |
| 5. | பீ. கே. விஜேகுணவர்தன | 60,432.00 |

மேற்படி இல. 2 இனை நட்டம் என பதிவழிப்பதற்கான அனுமதியைப் பெறுவதற்காக திறைசேரிக்கு வழிப்படுத்தப்பட்டுள்ளதோடு, அவர்கள் ஸ்தாபனப் பேரவையின் அனுமதியைப் பெற்று, நட்டம் என பதிவழிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதோடு இந்த ஆண்டில் ஸ்தாபனப் பேரவை நியமிப்பது தாமதமானமையால் தேவையான அனுமதியைப் பெற்று, 2015 ஆம் ஆண்டுக் கணக்குகள் மூலம் சீராக்கங்கள் செய்யப்படும்.

மற்றைய கடன்பட்டோர் மீதிகள் நிறுனத்தின் வெவ்வேறு பிரிவுகளின் செயற்பாடுகள் காரணமாகத் தோன்றிய கடன்பட்டோர் மீதிகளாதலால் அப்பிரிவின் உறுதிப்படுத்தல்கள் மற்றும் சட்டத்துறை அறிவுறுத்தல்களைப் பெற்று 2015 ஆம் ஆண்டில் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**தற்போதைய நிலைமை**

1. கல்வி அமைச்சு - ரூபாய் 3,237,799.66
   2016.12.27 ஆனது கல்வி அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக மீளவும் விடயங்கள் கலந்துரையாடப் பட்டன. அதன்போது இந்த கருமம் தொடர்பாக வழங்கப்பட்ட கோரிக்கையை முன்வைக்குமாறு கல்வி அமைச்சின் பிரதான நிதி அதிகாரியினால் தேசிய கல்வி நிறுவகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான ஒரு கோரிக்கை கிடையாதாகையால் இப்பணத் தொகையைப் பதிவழிப்பதற்கான இணக்கப் பாட்டை மிண்டுமொரு தடவை கல்வி அமைச்சுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. பீ. ஆர். எம். தயானந்த- 124,889.90
   ஈடு செய்யாத முற்பணமாகிய இப்பணத்தை 2016 யூன் மாதந் தொடக்கம் தவணை முறையில் அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. தேசிய கடதாசிக் கூட்டத்தாபனம் - 318,500.00
   இந்த நிலைமை குறித்து கடதாசிக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் பணத்தை ஒரேயடியாகச் செலுத்த மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தவணை முறையிலேனும் செலுத்துமாறு கடதாசிக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

4. எஸ். சமரவீர - 28,302.00
   இந்த அதிகாரி தற்போது நிறுவன சேவையில் இல்லையென்பதோடு முற்பணம் ஈடுசெய்யப்படவில்லையாதலால் இப்பணத்தை நிறவனத்துக்குத் திருப்பிச் செலுத்துமாறு அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

5. பீ. கே. விஜேகுணவர்தன - 60,432.00
   நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செயய்ப்பட்டுள்ளது. வழக்கு இல. 2706/17/M

**2.4 சட்ட திட்டங்கள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்களுடன் இசைவாகாமை**

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 371

(i) பெற்றுக்கொண்ட முற்பணத்தின் மீதிப் பணம் குறித்த அதிகாரியினால் தாமதமின்றி வைப்புச் செய்யப்பட்டுள்ளதோடு, முன்பணத்தை ஈடு செய்வதற்குத் தேவையான ஆவணங்களை முன்வைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. முற்பணம் ஈடு செய்தல் தாமதம் ஏற்படுவதற்கு கணக்கீட்டுப் பிரிவில் ஊழியர் பற்றாக்குறை காணப்படுகின்றமையும் முற்பணத்தைப் பெற்ற அதிகாரிகள் மூலம் ஈடு செய்தல் ஆவணங்களை வேளைக்கு முன்வைக்காமையும் ஆகும். இதற்கமைய, முற்பணம் ஈடு செய்தல் தொடர்பான ஆவணங்களை உடனடியாக நிதிப் பிரிவுக்கு அனுப்ப ஆவண செய்யுமாறு குறித்த அதிகாரிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

காலாண்டுக் கணக்குக் கூட்டங்கள் நடத்தி அதன் பின்னர், முன்னேற்றம் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 2014 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு ஈடு செய்யப்பட்ட 17 முற்பணங்கள் தொடர்பான விபரங்கள் பட்டியல் 01 இல் தரப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**

- எல்லா முற்பணங்களும் ஈடு செய்யப்பட்டுள்ளன. தாமத காலத்துக்காக தண்டப் பணமும் அறவிடப்பட்டுள்ளது.

(ii) ஆண்டுத்திட்டத்தின்படி அந்தந்தத் துறையினால் ஒழுங்கு செய்யப்படும் அனுமதிக்கப்பட்ட செயலமர்வு மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டுள்ள வளவாளர்களுக்கும் பங்குபற்றுவோருக்கும் செலுத்த வேண்டிய பணத்துக்காக, குறித்த அதிகாரிகளுக்கு முற்பணம் வழங்கப்பட்டுள்ளது.

நிதிப்பிரமாணம் 371 இன்படி முற்பண வறையறைக்கமைய, ஓர் அதிகாரிக்கு ரூபா. 20,000 மாத்திரமே முற்பணமாகப் பெறலாம். அதற்கமைய முற்பணத்தொகை ரூபா. 20,000 இலும் மேற்படும்போது ஒன்றுக்கு மேற்பட்ட அதிகாரிகள் முற்பணம் பெற நேரிடும். கணக்காய்வு மீளாய்வில் குறிப்பிடப்பட்டிருப்பது பெரும்பாலான சந்தர்ப்பங்களில் முற்பண வரையறையின் பேரில் ஒரு செயலமர்வுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட அதிகாரிகள் பெற்ற முற்பணங்களிலிருந்து, செயலமர்வில் பங்கபற்றாதோருக்குரிய மீதிப்பணம் வைப்புச் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

சில சந்தர்ப்பங்களில் மதிப்பீட்டில் பெயர் உள்ளடக்கப்பட்டிருந்த வளவாளர்களும் பங்குபற்றுவோரும் தவிர்க்க முடியாத காரணங்களால் செயலமர்வில் பங்குபற்றாத சந்தர்ப்பங்களும் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்ற முற்பணம் மீதியாவதோடு அப்பணம் தேசிய கல்வி நிறுவகக் கணக்கொன்றில் வைப்புச்

செய்யப்படும். பெற்ற முற்பணத்தில் மீதிப்பணம் இருக்குமாயின் செயலமர்வு முடிவடைந்த தினத்துக்கு மறுநாளே தேசிய கல்வி நிறுவகத்தில் அதனை வைப்புச் செய்தல் வேண்டும். தாமத காலத்துக்காக மாதத்துக்கு 4% தண்டப்பணம் அறவிடப்படும். இதன் மூலம் முற்பணச் செயன்முறை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**

- நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசுத் தாபனக் கோவை

(i) iv ஆம் அத்தியாயம் 3.3 ஆம் உறுப்புரை

அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிகளுக்கமைவாக பணிப்பாளர் பதவி வரையில் ஆட்சேர்க்கும் அதிகாரத்துவம் பணிப்பாளர் நாயகத்துக்குரியது. அவ்வதிகாரத்துவத்தின் கீழ், அவசர மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்காக இந்த ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் உள்வாரி, வெளிவாரி விண்ணப்பங் கோரல் மூலம், முறையாக வெற்றிடங்களை நிரப்ப ஆவண செய்யப்படும். எதிர் காலத்தில் ஆட்சேர்க்கப்படும் விதிமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

**தற்போதைய நிலைமை**

- மேற்படி பதில் பொருத்தமானது.

(ii) தாபனக் கோவையின் iv ஆம் அத்தியாயம் 3.3 ஆம் உறுப்புரை

2013.12.07 தொடக்கம் உருவாகிய நிருவாக அதிகாரி பதவிக்காக, தாபனப் பேரவையின் அனுமதியுடன் 2013.12.07 தொடக்கம் அப்பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் அதிகாரியொருவர் ஆட்சேர்க்கப்பட்டுள்ள போதிலும் அவரது ஒப்பந்தச் சேவைக்காலம் 2015.06.23 ஆந் திகதிய கடிதம் மூலம் முடிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது நிருவாக அதிகாரி பதவிக்காக உள்வாரிப்பதவி உயர்வு மூலம் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**தற்போதைய நிலைமை**

- குறைபாடு நிவர்த்திக்கப்பட்டுள்ளது.

## 3. நிதி மீளாய்வு

3.1 நிதிப் பெறுபேறுகள்
ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3.2 நிறுவனத்தினாலும் நிறுவனத்துக்கு எதிராகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்

1. திரு. கே. அன்ரன் ரவீந்திர குமார்

   மேற்படி அதிகாரி வெளிநாடு செல்லும்போது செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறியமையால், நுகேகொடை மாவட்ட நீதி மன்றத்தில் இல. 780/9/M வழக்கு தாக்கல் செய்யப்படடிருந்தது. இந்த வழக்கில் பயிலுநரான பிரதான பிரதிவாதியான வதிவிட முகவரியைத் தேடிப்பிடிக்க முடியாமற்போனமையால் அவரது பிணையாளராகிய 2 ஆம் பிரதிவாதியாகிய திருமதி. எஸ்.எம். காஸிம் இடமிருந்து அப்பணத்தொகையாகிய ரூபா. 2,237,337.05 இனை பெற்றுக் கொள்வதற்காக ஒரு தரப்புத் தீர்ப்பு பெறப்பட்டுள்ளது.

   இந்த பயிலுநர் தற்போது வெளிநாட்டில் உள்ளமையாலும் அவரது ஒரு பிணையாளர் தற்போது வெளிநாட்டில் உள்ளமையாலும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது. இரண்டாம் பிரதிவாதிக்கு எதிரான ஒரு தரப்புத் தீர்ப்பு 2013.03.21 ஆனது வழங்கப்பட்டுள்ளது. சட்ட மா அதிபர் திணைக்களத்தினால் அத்தீர்ப்பின்படி தீர்வுக் கூற்றைத் தயார்ப்படுத்தி இரண்டாம் பிரதிவாதிக்கு அனுப்புவதற்காக மாவட்ட நீதிமன்றுக்கு வழிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

   இந்த வழக்கில் இரண்டாம் பிரதிவாதிக்கு எதிராக வழங்கப்பட்டுள்ள ஒரு தரப்புத் தீர்வுக் கூற்று, நீதிமன்று பிஸ்கல் மூலம் மூலம் வழிப்படுததப்பட்ட போதிலும் அவர் அம்முகவரியை விட்டுச் சென்றுள்ளமையால் அவரிடம ஒப்படைக்க முடியாதுள்ளது. இரண்டாம் பிரதிவாதியின் தற்போதைய முகவரியை அறிந்து கொள்வதற்காக, வத்தளைப் பொலிசுக்கும் பிரதேச சபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

   தற்போதைய நிலைமை

   இந்த வழக்கு முடிவடைந்துள்ளது. தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது பிரதிவாதியாகிய திருமதி காஸிம் குறித்த முகவரியிலிருந்து நீங்கியுள்ளார். இது தொடர்பாக கடவத்தைப் பொலிசுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் இந்த முகவரியில் வதிவதை விட்டுச் சென்றார் என கடவத்தைப் பொலிசு அறிவித்துள்ளது. (இணைப்பு - 01)

2. திருமதி S. A. M. S. N. செனவிரத்ன

   இந்த அதிகாரிக்கு எதிராக கல்கிஸ்ஸை மாவட்ட நீதிமன்றில் இல. 4801/05/M வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கின் பிரதவாதியும் பிணையாளர்கள் இருவரும் நாட்டை விட்டுச் சென்றுள்ளனர். அவர்களைக் கண்டுபிடிப்பதற்காக இந்நாட்டின் குறித்த பிரதேச பொலிசு மற்றும் பிரதேச

செயலாளர் அலுவலகங்களுக்கு அறிவிக்கபபட்டுள்ளதோடு அம்முகவரிகளில் அவர்களது வதிவைக் கண்டுபிடிக்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. அவரின் தற்போது வெளிநாட்டில் வசிப்பதாகக் கூறப்படும் முகவரியைக் கண்டுபிடிப்பதற்காக அமெரிக்காவில் இலங்கைத் தூதுவராலய அலுவலகத்துக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாயினும் இதுவரையில் கண்டுபிடிக்க முடியாமற் போயுள்ளது.

இந்த பயிலுனரும் குறித்த பிணையாளர்கள் இருவரும் வெளிநாடு சென்றுள்ளமையால் அனைவர்க்கும் நீதிமன்றின் மூலம் அழைப்பாணையை ஒப்படைக்க முடியாது என நீதிமன்றுக்கு பிஸ்கல் அறிவிப்புச செய்யப்பட்டுள்ளது.

வழக்கின் 1 அம் 2 ஆம் 3 ஆம் பிரதிவாதிகள் குறித்த முகவரிகளில் இல்லையாதலால் அழைப்பாணைகளை ஒப்படைக்க முடியாதள்ளது. எனவே வழக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**

இவ்வழக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

3. **திருமதி. A. P. S. பதிரண**

இந்த வழக்கு தற்போது கல்கிசை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

தேசிய கல்வி நிறுவகத்துக்கு 2000 ஆம் ஆண்டில் புதிய கல்விசார் பணியணிக்காக அங்கீகரிக்கப்பட்ட பல்லைக்கழகங்களில் வகுப்புச் சித்தி பெற்ற பட்டதாரிகளை ஆட்சேர்த்து அவரக்ளுக்கு உலக வங்கி உதவியுடன் GEP 2 செயற்றிட்டத்தின் கீழ் கலைத்திட்ட அபிவிருத்தி தொடர்பான கல்வி முதுமாணிக் கற்கநெறியைப் பயிலுவதற்காக வெளிநாட்டுப் புலமைப்பரிசில் வழங்கப்பட்டு பின்னர் அவர்களை நிறுவன சேவையில் ஈடுபடுத்தும் இணக்கப்பாட்டுடன் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். அதற்கமைய இந்த புதிய பணியணியயினர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர், அவ்விணக்கப்பாட்டின்படி இந்த அதிகாரிகளுக்கு மிகக் குறுகிய காலத்துக்குள் வெளிநாட்டுப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

வழக்கு தற்போது விசாரிக்கப்படுகிறது. அடுத்த வழக்குத் திகதி 2015.10.21 ஆகும்.

**தற்போதைய நிலைமை**

தற்போது தீர்ப்பு வழங்கப்படும் நிலையில் உள்ளது. பிரதிவாதிகள் மூலம் இணக்கப்பாட:டுக்காக நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அழைப்பு 2017.05.23 திகதிக்கு உள்ளது. குறித்த ஆவணம் இத்துடன் முன்வைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 02)

4. **திருமதி. B. K. விஜய குணவர்தன**

இந்த புலமைப்பரிசில்தாரி வெளிநாடு செல்லும்போது செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி மீள தனது நாட்டுக்கு வந்து பிணைக்கால வரையறையினுள் செவையாற்றாமையினால் அவருக்கு எதிராக வழங்கத் தாக்கல் செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு இந்த அதிகாரிக்கு 2013.11.15 ஆந் திகதி, சட்டமா அதிபர் மூலம், ரூபாய் 1,335,285.99 தொகைப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக அழைப்பு அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

முறையீடு வரைவு செய்யப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**

நுகேகொடை மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு இல. 2706/17/M

5. **திருமதி. K. W. P. A. வீரவர்தன**

இந்த அதிகாரியிடமிருந்து பணம் அறவிட்டுக் கொள்வதற்கான 2013.06.05 ஆந்திகதி, அழைப்பு அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. முறையீடு வரைவு செய்யப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**

வழக்கு விசாரணை செய்யப்படுகிறது. அடுத்த வழக்குத் திகதி 2017.08.28 ஆகும்.

6. **S. M. M சேனாநாயக்க**

இந்த உத்தியோகத்தருக்கெதிராக நுகேகொடை மாவட்ட நீதிமன்றத்தில் இல 669/08/M வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு 2013 -08 -06ம் திகதி அழைக்கப்பட்ட போது இந்த உத்தியோகத்தர் அந்தத்தொகையை 5 வருடத்துக்குள் (தவணை 60) செலத்தி முடிக்க ஆவன செய்வதாக நீதிமன்று முன்னிலையில் இணக்கப்பாடு முன்வைக்கப்பட்டது. வழக்கு முடிவடைந்துள்ளது.

அதன்படி 2013-10-30ம் திகதி நடைபெற்ற உடன்பாட்டுக்கமைய S. M. M சேனாநாயக்க அவர்களால் 2013-12-18ம் திகதியிலிருந்து 2016- 12- 19ம் திகதி வரையில் 335,890.39 ரூபாய் பணத்தொகையை நிறுவனத்திற்குச் செலுத்தியுள்ளார். (ரூபா 14,603. 93 x 23 தவணைகள்) அதன் முதலாம் மற்றும் கடைசித் தவணைக் கொடுப்பனவுக்குரிய பற்றுச் சீட்டின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு - 03)

**தற்போதைய நிலைமை**

2017-04.20ம் திகதி வரையில் 41 தவணைகளில் ரூபாய் 598,761.13 பணம் நிறுவனத்துக்குச் செலுத்தப்பட்டுள்ளது. (ரூபா 14,603. 93 x 23 தவணைகள்) அதன் முதலாம் மற்றும் கடைசித் தவணைக் கொடுப்பனவுக்குரிய பற்றுச்சீட்டின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு - 03)

(ஆ) நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ நிகழ்வுகள்.

**தொழிலாளர் தீர்ப்புச்சபை - திரு. B. R. M. தயானந்த**

இவரால் ரூ. 36000 நிதி மோசடி தொடர்பாக முறைமையான ஒழுக்காற்று விசாணை நடத்தப்பட்டு, அதற்கமைய குற்றவாளியாகியமையால் சேவையிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். இவர் நிறுவனத்திற்கெதிராக M.H./33/ 208/2004 ஆம் இலக்க வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

வழக்கு முடிவடைந்துள்ளது. தீர்ப்பு 2015.09.29 ஆனது வெளியிடப்பட இருந்த போதிலும் 2015.10.29 வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**

வழக்கு முடிவடைந்துள்ளது. தொழிலாளர் தீர்ப்புச் சபையின் கட்டளைப்படி குறித்த அதிகாரி மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளதோடு ருபாய் 388.800 சம்பள நிலுவையை விண்ணப்பதாரி பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் தொழில் ஆணையாளர் - மகரகம இன் பேரில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. இந்த அதிகாரி 2015.13.04 அன்று வேலையைப் பொறுப்பேற்றுள்ளார்.

**திருமதி. நில்மினி விக்கிரமசிங்க**

தேசிய கல்வி நிறுவகத்தின் நூல்விற்பனைச்சாலை, தினசரி விற்பனை மூலம் 2009 ஆம் ஆண்டின் காலப் பகுதிக்குள் ரூபா. 549, 772. 50 பணத்தினை தனிப்பட்ட தேவைக்குப் பயன்படுத்தப்பட்டமை சம்பந்தமாக முறையான ஒழுக்காற்று விசாரணை நடத்தி, குற்றவாளியானபடியால் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். அவர் இல M. H 33/1005 /11 என்ற வழக்கினை நிறுவனத்திற்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்.

தற்போது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இறுதிச் சாட்சியாளரின் சாட்சியங்கள் பெறப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**

முறைப்பாடு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய விண்ணபதாரி மூலம் உருவாக்கப்பட்ட சூழமைவினுள் பிரதிவாதி மூலம் அவர் சேவையிலிருந்து நீக்கப்பட்டமை சார்பாக அவருக்கு எவ்வித சட்ட பூர்வ நிலைமைகளின் கீழும் நிவாரணம் பெறும் உரித்து கிடையாது என தீர்ப்புச் செய்கிறேன் என நீதிமன்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (இணைப்பு 04)

**திரு. M. K. D. தேசப்பிரிய**

தொழில் தீர்ப்புச் சபை M. H 33/1179 /14

இது தொடர்பான ஓர் இணக்கப்பாடு மூலம் தாபனப்பேரவையின் அனுமதியுடன் 2015.08.04 ஆந் திகதி தொடக்கம் மீண்டும் இவர் சேவையில் அமர்த்தப் பட்டுள்ளார். நிறுவன சம்பளப் பணமும் செலுத்தப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**

2015.07.13 ஆந் திகதி கூடிய 398 ஆம் தாபனப் பேரவைக் கூட்ட அமர்வின் போது இந்த அதிகாரியை நிலுவைச் சம்பளத்துடன் சேவையில் அமர்த்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2015.08.04 ஆந் திகதி மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டுள்ளார். எச்சரிக்கைக் கடிதம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. (இணைப்பு 05)

**WP/ HCCA/ MT/ 12/2012 RA - சிவில் நீதிமன்றம் கல்கிசை**

**திருமதி. K. D. L. ராணி**

தேசிய கல்வி நிறுவகத்தினூடாக நடத்தப்பட்ட தொலைக்கல்விப் பயிற்சி பாடநெறி முழுமையாக பூர்த்தி செய்யப்படாமையால், சான்றிதழ்கள் வழங்கப்படாமையால் நிறுவனத்திற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 11/ 2007 இலக்க வழக்கினை தாக்கல் செய்யப்பட்டது. எனினும் அவரது முறைப்பாடு நிராகரிக்கப்பட்டது. மீண்டும் அவர் அதே விடயத்துக்காக நுகேகொட மாவட்ட நீதிமன்றத்தில் இல SPL/125 /09 இலக்க வழக்குத் தாக்கல் செய்ததோடு அந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டது.

அவர் மீண்டும் இது தொடர்பாக கல்கிசை சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றில் மேற்படி இலக்கத்தின்கீழ் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இவ்வழக்கு 2015.09.21 அன்று அமைக்கப்பட்டது. அடுத்த அழைப்புத்தினம் 2016.01.19 ஆகும்.

இது தொடர்பாக பரிசீலித்து அறிக்கை முன்வைப்பதற்காக சட்டத்தரணி திரு. சமித் கருணாநாயக்க அவர்களுக்கு வழிப்படுத்தப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**

வழக்கு விசாரிக்கப்பட்டு வருகிறது. அடுத்த வழக்குத் திகதி 2017.05.25 ஆகும்.

## 4. செயற்படுத்துகை மீளாய்வு

### 4.1 முகாமை வினைத்திறனின்மைகள்

(அ) முன்னர், ஆசிரியர் கலாசாலையும் தேசிய கல்வி நிறுவகமும் ஒரே வளாகத்தில் இருந்ததோடு தேசிய கல்வி நிறுவக அலுவலகம் அமைந்துள்ள காணி, பிற்காலத்தில் திட்டப்படம் வரையப்பட்டு தேசிய கல்வி நிறுவகக் கட்டங்களும் நிலமும் கல்விச் செயலாளரின் 2/காணி/2மேமா/1/1416/97 மற்றும் 2001.08.13 ஆந்திகதிய கடிதம் மூலம் கையளிக்கப்பட்டுள்ளது. இதற்கு உறுதிப்பத்திரம் எதுவும் கிடையாது.

மீப்பே (முன்னர் அழகியற்கல்வி நிறுவகம்) காணி, நிறுவகம் ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதி தொடக்கம் தேசிய கல்வி நிறுவகத்தினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த காணி சார்பாகத் திட்டப்படம் தவிர உறுதிப்பத்திரம் எதுவும் தேசிய கல்வி நிறுவகத்திடம் கிடையாது.

இக்காணிகளின் முறைமையான உரித்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கத் தேவையான ஆவணங்கள் தயாரிக்க ஆவன செய்யுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இக்காணிகளையும் கட்டடங்களையும் தேசிய கல்வி நிறுவகத்துக்கு முறைமையாகக் கையளிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்விச் செயலாளருக்கு 2015.07.06 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக தேவையான எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**தற்போதைய நிலைமை**

மகரகம காணியை தேசிய கல்வி நிறுவகத்துக்குக் கையளிப்பதற்காக, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் முன்மொழிவு மூலம் விசேட அமைச்சரவை அனுமதியைப் பெற வேண்டும் என மகரகமை பிரதேச செயலாள் அறிவித்துள்ளார். இது தொடர்பாக கல்விச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மீப்பே காணியைக் கையளிப்பதற்காக பாதுக்கைப் பிரதேச செயலாளர் மூலம் காணி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 06)

(ஆ) தேவையான ஒதுக்கீடுகள் கிடைக்காமையே இக்கருமம் நிறைவேறாமைக்குக் காரணமாகும். மலசல கூடத்தொகுதியை அமைக்கும் தேவைப்பாடு தற்போதும் காணப்படுகின்றமையாலும் ஆலோசனைக் கட்டணமாக வழங்கப்பட்ட ரூபாய் 1,200,949.33 செலவு பயனற்ற செலவாகுவதைத் தவிர்ப்பதற்காக இந்த நிர்மாணிப்புக்களுக்கான ஒதுக்கீட்டை மீண்டுமொரு தடவை கோருவது பொருத்தமானது என 53 ஆம் கணக்காய்வு மற்றும் முகாமைக் குழுக் கூட்டத்தில் தீர்மானமாகியது.

இக்கருமங்களுக்காக 2008 ஆம் ஆண்டில் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அளவைப் பட்டியலின்படி மொத்தச் செலவு ரூபாய் 28 மில்லியன் ஆக இருப்பதோடு, 2017 ஆம் ஆண்டில் மீளப்பெறப்பட்ட அளவைப் பட்டியலல்களின்படி ரூபாய் 62 மில்லியன் என ஆலோசனை நிறுவனம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஏறத்தாழ 25 வருட காலம் பழைமையான ஒரு கட்டத்துக்காக ரூபாய் 62 மில்லியன் செலவு செய்து, மலசல கூடங்கள், குளியலறைகள் நிர்மாணிப்பது தொடர்பாக அடுத்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடுவதெனத் தீர்மானிப்பது பொருத்தமானது என பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்பட்டது. இந்த தீரமானத்தின் பிரகாரம் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் இதற்கென 2017 ஆம் ஆண்டில் ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை.

## 4.2 செயற்படுத்துகை வினைத்திறனின்மைகள்

(அ) 2015 ஆம் ஆண்டில் 6 ஆந் தரங்களுக்காக அறிமுகஞ் செய்யப்படட பகுத்தறிவு ரீதியான கலைத்திட்டத்தின் கீழான பாடசாலைப் பாடத்திட்டங்களில் சிற்சில திருத்தங்கள் செய்யப்பட்ட போதிலும் பாடசாலை மட்டங்களில் மதிப்பீட்டுக் கருவிகளாக 6, 7, 8, 9 ஆந் தரங்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த நூல்களை புதிய கலைத்திட்டத்தின்கீழ் எவ்வித மாற்றங்களுமின்றிப் பயன்படுத்தலாம்.

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்டுக் கருவியாக அச்சிடப்பட்ட நூல்களுள் களஞ்சியசாலையில் மீதியாக உள்ள நூல்கள் எல்லாவற்றையும் 9 மாகாணங்களுக்கு இடையே விநியோகிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய வட மத்திய, வட மேல், ஊவா, சம்பிரகமுவ, வடக்கு கிழக்கு, மத்திய மற்றும் தென் மாகாணங்களிலும் இந்நூல்களை விநியோகிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேல் மாகாணத்துக்காக எதிர்வரும் நாட்களில் இந்த நூல்களை விநியோகிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**தற்போதைய நிலைமை**
மேல் மாகாணத்துக்காக ஏற்கனவே நூல்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதோடு, அச்சிட்ட 124,000 நூல்களுள் 306 நூல்கள் மாத்திரம் தற்போது களஞ்சியசாலையில் மீதியாக உள்ளன.

(ஆ) கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நூல்கள், கடந்த காலங்களில் அச்சிடப்பட்ட நூல்களாயினும் அவற்றின் உள்ளடக்கம் தற்காலத்துக்குப் பொருத்தமானதாகையாலும், மேலதிக வாசிப்பு நூலாக இவற்றைப் பயன்படுத்தத்தக்க நிலையில் காணப்படுகின்றமையினாலும் இந்நூல்களை 9 மாகாணங்களின் பாடசாலை நூலகப் பயன்பாட்டுக்காக விநியோகிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய வடமத்திய, வடமேல், ஊவா, சப்பிரகமுவா, வடக்கு, கிழக்கு, மத்திய, தென் மாகாணங்களுக்கு இந்நூல்கள் விநியோகப் பட்டுள்ளன.

மேல்மாகாணத்துக்காக எதிர்வரும் நாட்களில் இந்நூல்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**
மேல் மாகாணத்துக்காகவும் ஏற்கனவே நூல்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதோடு அச்சிடப்பட்ட 43,979 நூல்களுள் 4308 நூல்கள் தற்போது களஞ்சியசாலையில் மீதியாக உள்ளன.

(இ) தேசிய கல்வி நிறுவகத்தின் வெவ்வேறு பிரிவுகளுக்கான விரிவுரை மண்டபங்களுக்கு கதிரைகள் தேவைப்பட்டதோடு, சில விரிவுரை மண்டபங்களில் இருந்த கதிரைகள் நீண்ட காலம் பயன்படுத்தப்பட்டவையாதலால் 2014/06/18 ஆந்திகதியன்று பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெற்று இந்த 400 கதிரைகளையும் தேடிவழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவகத்தினால் ஆசிரியர்களுக்காகவும் கல்வித்துறை தொடர்பான வெவ்வேறு அதிகாரிகளுக்காகவும் பல்வேறு கற்கை நெறிகள் மற்றும் பயிற்சிச் செயலமர்வுகள் நடத்தப்பட்டதோடு இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றுவோருக்குத் தேவையான விரிவுரை மண்டப நாற்காலிகள் 400 கொள்வனவு செய்து வழங்க வேண்டியிருந்தமையால், தேடிவழங்கல் செயன்முறையை நடத்துவதற்கு காலம் செலவாகின்றமையாலும் தேடி வழங்கல் கைந்நூலுக்குரிய இணைப்பு 20 இன் பிரகாரம் தேடிவழங்கல் வழிகாட்டல் கோவையின் 3.5.1 இன்படி அரச நிறுவனமாகிய வரை இலங்கை அரச வணிக (நானாவித) நியதிக் கூட்டுத்தாபனத்தின் மூலம் தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு மற்றும் பிரதான தேடிவழங்கல் குழுவின் அனுமதியைப் பெற்று 400 விரிவுரைமண்டபக் கதிரைகள் 2,195,200 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

அரச நிதித் திணைக்களத்தினால் அரச வணிக (நானாவித) நிதிக் கூட்டுத் தாபனத்துக்கு வழங்கப்பட்ட PFD/PMD/Clari/19 எனும் கடிதமும் மேற்படி கருமத்தைச் செய்யும்போது கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. இந்த கொள்வனவின் போது இலங்கை அரச வணிக (நானாவித) நிதிச் சட்டக் கூட்டுத்தாபனத்தினால் குறித்த விலையில் 2 சதவீதக் கழிவு வழங்கப்பட்டள்ளது.

தேடிவழங்ல் விதிமுறைகளுக்குப் புறம்பாக, நேரடி ஒப்பந்த முறையை அனுசரிக்கும்போது கணக்காய்வாளர் தலைமையதிகாரிக்கு அதற்கான காரணங்களை அறிக்கைப்படுத்த வேண்டுமாதலால் அத்தேடிவழங்கல் கருமம் தொடர்பான தகவல்கள் NIE/TU/2014/34 இலக்க 2014.09.11 ஆந் திகதிய கடிதம் மூலம் கணக்காய்வாளர் தலைமையதிபரகத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும் தயவுடன் அறிவிக்கின்றேன்.

தற்போது இந்த 400 கதிரைகளும் களஞ்சியசாலையிலிருந்து விநியோகிக்கப் பட்டுள்ளது. அந்தந்த துறைகளில் காணப்பட்ட தேவைகளுக்கமைய இக்கதிரைகள் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டுள்ளன.

**தற்போதைய நிலை**

மீப்பே, கல்வித்தலைமைத்துவ அபிவிருத்தி நிலையம், மகரகம விரிவுரை மண்டப மற்றும் துறைகளின் அலுவலகத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 4.3 கருத்து முரண்பாட்டுக்கு ஏதுவாகிய கொடுக்கல் வாங்கல்கள்

(அ) தேசிய கல்வி நிறுவக 2014 ஆம் ஆண்டு வரவு செலவினுள் எழுதுபொருள்கள் மற்றும் அச்சு நடவடிக்கைகளுக்காகப் பின்வருமாறு ஒதுக்கீடுகள் வேறாக்கப்பட்டிருந்தன.

| | துறை | |
|---|---|---|
| | பணம் பொதுப்பயன்பாட்டுக்கான ரூபாய் | அச்சகம் ரூபாய் |
| TSEP | 2,000,000 | 6,000,000 |
| ADB | 1,000,000 | 2,200,000 |
| Income | 2,000,000 | 4,000,000 |

ஒதுக்கீடுகள் அந்தந்த நிதியங்களிலிருந்து கிடைத்த போதிலும் எழுதுபொருள்களுக்கான செலவுகள் பொதுவே செலவு செய்யப்படுவது (மேந்தலைக் கிரயமாதலால்) நிறுவனத்தில் காணப்பட்ட பிரயோகமாகும். அக்காரணத்தினால் குறித்த சான்றிதழ், உறைகளை எழுதுபொருள்கள் செலவினத்தலைப்பின் கீழ்க் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின்படி, 2015 ஆம் ஆண்டிலிருந்து இந்த நிலைமையை சரிசெய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**தற்போதைய நிலைமை**

இந்த நிலைமையைச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) கல்விப் பிரிவு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் (ESDP) கீழ் 2014 ஆம் ஆண்டுக்காக ரூபாய் 60 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இக்கொடுக்கல் வாங்கல் நிகழ்ந்த காலப்பகுதியாகும்போது ESDP ஒதுக்கீடுகள் கோரப்பட்டிருந்த போதிலும் போதுமானவாறு பணம் கிடைக்காமையினால் இக்கொள்வனவானது குறித்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக அவசரத் தேவைகளைக கொள்வனவாக இருந்தமையால் ESDP செயற்றிடடத்துக்கான பணம் கிடைத்த பின்னர் கணக்கு வைக்கும் நோக்கத்துடன் இக்கொடுப்பனவு TSEP செயற்றிட்டம் நிதி மூலம் செய்யப்பட்டது. எனினும் TSDP செயற்றிட்டத்துக்காக போதுமான நிதி கிடைக்காமை காரணமாக இந்த மாற்றல் குறிப்பை இடமுடியாமல் போனது. எனவே, 2014 வரவு செலவு திருத்தத்தின் போது செயற்றிட்டத்தின்கீழ் அதற்காக ஒதுக்கீடு நோக்கப்பட்டது.

கொள்வனவு செய்த 1000, 8GB Pen drives களஞ்சியசாலையிலிருந்து மீப்பே கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி நிலயத்துக்கு 2014.11.21 ஆந்திகதியன்று வழங்கப்பட்டள்ளது.

நாட்டின் ஆயிரம் பாடசாலை அதிபர்களைப் பயிற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயிற்சிக்குரிய கையேடுகள், கற்றற் சாதனங்கள், நூல்கள், மொடியூல்கள், வீடியோ காட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கி ஆயிரம் பாடசாலைகளுக்கு வழங்கவதற்காக மேற்படி ஆயிரம் Pen drives தேசிய கல்வி நிறுவக களஞ்சியசாலையிலிருந்து இந்த நிலையைத்துக்கு வழங்கப்பட்டள்ளது.

அந்த Pen drives களல் புகுத்த வேண்டிய மேற்படி கற்றல் சாதனங்களைக் கணினி மூலம் ஒரு பொதியாகத் தயார்ப்படுத்தி ஆயிரம் Pen drives களில் பிரதி செய்ய வேண்டியுள்ளது. அதற்காக குறித்த கருமங்களைச் செயவதற்காக தொழினுட்ப உதவியாளர் பற்றாக்குறை காணப்பட்டமையால் அக்கருத்தைப் பூர்த்தி செய்வது தாமதமான போதிலும் இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் அடுத்த இரண்டு ஆண்டு முழுவதும் நடைபெறுகின்றமையால் பூர்த்தி செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின்போது பகிர்நதளிக்கப்பட்டு வருகின்றன. Pen drives களில் உட்புகுத்த வேண்டிய அம்சங்களை ஒரு கணினி நிகழ்ச்சித் திட்டமாகத் தயாரித்து முடிக்க வேண்டியுள்ளதோடு இதற்காக கணிசமான காலம் தேவைப்பட்டமையால் இக்கருமம் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு ஆயிரம் இடைநிலைப்பாடசாலைகளுக்கும் இந்த Pen drives களை பகிர்ந்தளிக்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் முடிவடைய முன்னர் பகிர்ந்தளிப்பைப் பூர்த்தி செய்ய முடியும் என்பதை அறிவிக்கின்றேன்.

**தற்போதைய நிலை**

அவற்றுள் 742 Pen drives பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான விபரங்கள் இணைப்பு இல. 07 இல் தரப்பட்டுள்ளன.

## 4.4 நிதியங்களில் குறை பயன்பாடு

2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொர் ஆண்டிலும் ஆராய்ச்சி நிதியத்தைப் பயன்படுத்துவதற்காக ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்த ஆவன செய்யப்படும்.

கல்வித் துறையில் ஆராய்ச்சி நடத்துவது நிறுவனத்தின் முதன்மையான ஒரு பணி என தாபனப் பேரவை இனங்கண்டுள்ளது.

தற்போதைய நிலைமை

புறவாரி ஆராய்ச்சியாளர்களால் வழிப்படுத்தப்படும் ஆராய்ச்சி முன்மொழிவுகளின் படி ஆராய்ச்சி அறிக்கைகளுக்காக இந்த நிதியம் பயன்படுத்தப்படுகிறது. 2017 ஆம் ஆண்டில் 4 ஆராய்ச்சி அளிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்குத் தேவை யான பிரமாணங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

## 4.5 இனங்காணப்பட்ட நாட்டங்கள்

அச்சகத்துக்கு வழங்கப்பட்ட நி/2014/132 இலக்க கோரிக்கைக்கு அமைவாக அச்சகத்தினால் பரிட்சைகள் துறைக்கு அனுப்பப்பட்ட முதன் மாதிரிச் சான்றிதழ் கையொப்பமிடல் அதிகாரிகளின் பதவிகள் பதவிப் பெயர்கள் இடும்போது மீளத் தயார்ப்படுத்தலொன்று செய்ய நேரிட்டமைக்குக் காரணம் சான்றிதழில் சமனிலைத் தன்மையை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டமையாகும்.

சான்றிதழ்களை மீள அச்சிடும்போது சான்றிதழில் எனும் சொற்களில் என்பதில் எழுத்து விடுபாடு காணப்பட்டமை இனங்காணப்பட்டது. அதற்கமைய அது திருத்தஞ் செய்யப்பட்டு குறித்த தொகைச் சான்றிதழ்கள் மீளப் பெற்றுத்தருமாறு அச்சகத்துக்கு

அறிவித்து ஆரம்பக்கட்டத்திலேயே தவறு இடம்பெற்றுள்ள சான்றிதழ்களை தெரிந்து கொண்டே வழங்கும் பாரதூரமான தவறைத் திருத்திக் கொள்ளும் நோக்குடன் இவ்வாறான ஒரு நடவடிக்கையை எடுக்க நேரிட்டுள்ளது. மேலும் தேசிய கல்வி நிறுவகத்தின் கௌரவம் பாதிக்கப்பட்டுள்ளதோ்டு தவறுடன் அச்சிடப்பட்டிருந்த சான்றிதழ்களுக்குப் பதிலாக மீண்டும் சான்றிதழ்கள் அச்சிடுவதற்காக செலவை நிறுவனம் பொறுப்பேற்க நேரிட்டமையை ஏற்றுக்கொள்கின்றேன்.

இச்சான்றிதழில் குறிப்பிட்டிருந்ததற்கமைய பட்டமளிப்பு விழா 2015.01.20 ஆந்திகதியன்று நடைபெற இருந்தது. அத்திகதி ஆகும்போது புதிய அரசின் நியமனத்துடன் புதிய கல்வி அமைச்சர் நியமிக்கப்பட்டமையால் பட்டமளிப்பு விழா நடத்தப்படும் திகதியை ஒத்திவைக்க நேரிட்டது. அதற்கமைய அச்சிட்ட 1450 சான்றிதழ்களைப் பயன்படுத்த முடியாமற் போனது.

பட்டமளிப்புத் திகதியை சரியாகக் குறிப்பிடாது வழுவுடன் கூடி சான்றிதழ்களை வழங்குவதால் நிறுவனத்தின் நற்பெயருக்கு தீங்கு விளைவிப்பதை தவிர்க்கும் நோக்குடன் பட்டமளிப்பை நடத்தத் தீர்மானிக்கப்பட்ட 2015 மார்ச் 26 ஆந் திகதியை இட்டு மீண்டும் சான்றிதழ்கள் அச்சிட நேரிட்டது.

பல ஆண்டுகளாக பெறுபேறுகள் தாமதமாகிக்கிடந்த பல பரீட்சைகளின் பெறுபேறுகளை 2012 ஆம் ஆண்டு தொடக்கம் துரிதமாக வெளியிட விசேட வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தி, குறித்த காலத்தில் பட்டமளிப்பு விழாவை நடத்த நடவடிக்கைகளை எடுக்க முடிந்தது.

இந்த நிலைமையின்கீழ் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை ஏற்றுக் கொள்வதோடு, இனிவரும் காலங்களில் அவ்வாறான நிலைமைகள் ஏற்படாதிருக்க கவனஞ் செலுத்தப்படும் என பணிப்பாளர் - பரீட்சை அறிக்கைப் படுத்தியுள்ளார் என்பதையும் தயவுடன் அறிவிக்கின்றேன்.

**தற்போதைய நிலைமை**

இக்குறைபாடுகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

2017 சனவரி 31 ஆந் திகதி கௌரவப் பிரதமரின் தலைமையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் இவ்வாறாக குறையேதுமின்றி 1400 பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 4.6 பணியணியினர் நிருவாகம்

1. பணியணியினர் : 2015.06.30 ஆந்திகதியன்று அனுமதிக்கப்பட்ட பணியணியினர் வருமாறு:

| | அனுமதிக்கப்பட்ட தொகை | உண்மை நிலை | வெற்றிடங்கள் தொகை | மேலதிகம் |
|---|---|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 108 | 70 | 38 | |
| மூன்றாம் நிலை | 200 | 108 | 92 | |
| இடைநிலை மட்டம் | 223 | 175 | 48 | |
| ஆரம்ப மட்டம் | 121 | 106 | 15 | |
| பிற (அமைய/ தற்காலிக) ஒப்பந்த அடிப்படை | - | 16 | - | |
| மொத்தம் | 652 | 475 | 192 | |

தேசிய கல்வி நிறுவக ஒழுங்கமைப்பை மீளக் கட்டமைக்கும் மற்றும் ஊழியர் தொகையைத் துணியும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு வெற்றிடங்களை நிரப்புவதற்காக துரிதமமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

- தேகநி/பாமு/ஆசே 1/ 121/27/2015/2016 ஆம் இலக்க 2015.12.01 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் 108 பதவிகளுக்க அனுமதியைப் பெறுவதற்காக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்துக்கு வழிப்படுத்தப்பட்டுள்ளது.
- 2016.09.09 ஆந்திகதி 190 பதவிகளுக்கு அனுமதி பெறுவதற்காக கடிதம் வழங்கப்பட்டுள்ளது.
- இறுதியில் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் ஆம் இலக்க 2016.09.30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 79 பதவிகளுக்கு மாத்திரம் அனுமதி கிடைத்துள்ளது. (இணைப்பு - 08) அதன்படி பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- மீள்கட்டமைத்தலின்போது 05 சிரேட்ட விரிவுரையாளர் பதவிகள் வழங்குவது தொடர்பாகத் தோன்றிய ஒரு பிரச்சினை தொடர்பாகக் கவனஞ் செலுத்துமாறு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் வேண்டுகோளொன்று விடுத்துள்ளது.
- மீதியாக உள்ள பதவிகளுக்காக புதிதாக ஆட்சேர்ப்புத் திட்டமொன்று தயாரித்து முன்வைக்குமாறு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் வழங்கியுள்ள அறிவுறுத்தல்களின்படி தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றத.

- இந்த திட்டங்களின்படி தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுப்பதற்கு பணிப்பாளருக்கு (நிருவாகம், மனித வளம்) அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

2016.09.30 ஆந்திகதிய DMS 1501 ஆம் இலக்கக் கடிதம் மூலம் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதி கிடைத்த பின்னர் 09 பணிப்பாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரி 04 பணிப்பாளர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு (1)

பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரி நேர்முகப்பரீட்சை நடத்தி, தாபனப் பேரவையின் அனுமதிக்காக வழிப்படுத்தப்பட்டுள்ளது. மீதியான 04 பணிப்பாளர் பதவிகளுள், பணிப்பாளர் (சமயங்களும் விழுமியங்களும்) பணிப்பாளர் (கல்வி நிருவாகமும் அபிவிருத்தியும்), பணிப்பாளர் (உட்படுத்தற் கல்வி) ஆகிய வெற்றிடங்கள் நிரப்புதலை 2017 இல் செய்யும் அடிப்படையின்கீழ் ஒத்திவைத்து, அதற்குப் பதிலாக, பணிப்பாளர் (ஆசிரியர் கல்வி), பணிப்பாளர் (நிருவன அபிவிருத்தி), பணிப்பாளர் (தொழில்சார் கல்வியும் கல்வி முகாமையும்) ஆகிய மூன்று பணிப்பாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கும் அதற்காக 2017 ஆம் ஆண்டில் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெறுவதற்காக கல்விச் செயலாளரின் அனுமதி 2016 நவம்பர் 04 ஆந்திகதி பெறப்பட்டுள்ளது. (இணைப்பு - 09)

பணிப்பாளர் (தமிழ்மொழி) பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக 2017 ஆம் ஆண்டில் முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியைப் பெறும் அடிப்படையில் நிரப்புவதற்காக கல்வி அமைச்சின் செயலாளரின் அனுமதி 2017.01.23 ஆந்திகதியன்று பெறப்பட்டுள்ளது. (இணைப்பு - 10)

அதற்கமைய 04 பணிப்பாளர் பதவிகளுக்கும் மொழிபெயர்ப்பாளர் பதவிகளுக்குமாக 2017.01.31 ஆந்திகதி செய்தித்தாள் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. (இணைப்பு - 11) இதுவரையில் விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. நேர்முகப்பரீட்சை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கை திட்டமிடப்பட்டுள்ளன.

முகாமைத்துவ உதவியாளர் பதவிகள், தொழினுட்ப அதிகாரி பதவிக்காக உள்வாரியாக விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. நேர்முகப்பரீட்சை நடத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

சிரேட்ட விரிவுரையாளர் பதவிகள் 23 இற்காக விண்ணப்பம் கோரப்பட்டு, நெர்முகப்பரீட்சை நடாத்தி பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. விரிவுரையாளர் பதவிகளுக்காக உள்வாரி பதவி உயர்வுக்காக விண்ணப்பம் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.

உதவி விரிவுரையாளர் பதவிகள் 25 தெரிவு செய்வதற்காக முதலாம் சுற்றுத்தேர்வு பூர்த்தி செய்யப்பட்டு 2017 மே மாத இறுதி வாரம் தொடக்கம் நேர்முகப்பரீட்சை நடத்த ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலதிக பணிப்பாளர் நாயகம் பதவி மற்றும் பிரதிப் பணிப்பாளர் நாயகம் பதவிகள் 02 ஆகியவற்றுக்காக அதிகாரிகளை ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக பணிப்பாளருக்கு (நிருவாகம், மனித வளங்கள்) அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

## 5. கணக்கீட்டு நடவடிக்கைகளும் நற்கட்டுப்பாடும்

### 5.1 வரவு - செலவு அறிக்கைக் கட்டுப்பாடு

இருந்த தாபனப் பேரவையின் காலம் 2014.12.31 அன்று முடிவடைந்ததோடு புதிய தாபனப் பேரவை நியமிப்பது 2015 ஏப்ரில் வரை தாமதமாகியமையால் திருத்தியமைத்த வரவு - செலவு திட்டத்தை தாபனப் பேரவையின் அனுமதிக்காக முன்வைப்பதற்கு மே வரையில் தாமதம் ஆகியது.

கணக்காய்வு அறிக்கையில் உண்மையான செலவுகள் மற்றும் வரவு செலவுத்திட்டப் பெறமானத்துடன் ஒப்பிடும்பொது 24 சதவீதத்திலிருந்து 101 சதவீதம் வேறுபட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக பின்வரும் விளக்கங்களை முன்வைக்கின்றேன்.

**செயற்படுத்தல் வருமானம்**

| | |
|---|---|
| வரவு - செலவுப் பெறுமானம் | ரூ. 142,000,000 |
| உண்மைப் பெறுமானம் | ரூ. 404,651,628 |

நிறுவனத்தின் 2014 செலவுத்திட்டத்தில் வருமானத்தின் கீழ் இருந்த வரவு - செலவு அளவானது திருத்தியமைத்த வரவு - செலவுத் திட்டத்தில் மாற்றத்துக்கு உள்ளாகவில்லை. அது ரூபாய் 142,000,000 ஆகும். அப் பணத்தொகையானது, கற்கை நெறிக் கட்டணங்கள், பரீட்சைக் கட்டணங்கள், விடுதி வருமானம், முன்பள்ளி வருமானம், திறைசேரி உண்டியல் வட்டி ஆகிய உருப்படிகளால் உருவாகியுள்ளது.

இறுதிக்கணக்கில் வருமானம் எனக் காட்டப்பட்டுள்ள ரூபாய் 404,651,628 பணத்தொகையினுள் மேற்படி வரவு செலவுத் திட்டத்தில் அடங்கியிராத வைப்பு வருமானம், விற்பனை வருமானம், நூலக வருமானம், ஏனைய வருமானங்களின் ஒரு பகுதி ஆகியனவும் அடங்கியுள்ளன.

**ஆட்களின் சம்பளங்கள், கொடுப்பனவுகள்**
**குழுக் கொடுப்பனவுகள்**
ஏற்றுக்கொள்கின்றேன்

எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமை ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.
பணிக்கொடை

| | |
|---|---|
| வரவு செலவுத்திட்டப் பெறுமானம் | ரூபாய் 6,000,000 |
| உண்மைப் பெறுமானம் | ருபாய் 11,262,747 |

பணிக்கொடைக் கொடுப்பனவுக்காக, வரவு செலவு ஒதுக்கீட்டைத் தீர்மானிக்கும்போது ஆண்டினுள் உண்மையாகச் செலுத்த நேரிடும் அளவுக்காக மதிப்பீடு செயயப்பட்டுள்ளதோடு, ஆண்டினுள் பணம் செலுத்தியுள்ள அளவு ரூ. 5,610,627.93 ஆகும். ஆண்டு இறுதியில் செய்த ரூ. 9,977,010.08 பணிக்கொடைக் கொடுப்பனவு ஒதுக்கீடு (பேரேட்டுக் குறிப்பு இல. 035) காரணமாக இந்த மாறல் ஏற்பட்டுள்ளது.

**வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருள்கள்**

**எழுது பொருள்கள்**

| | |
|---|---|
| வரவு செலவுத்திட்டப் பெறுமானம் | ரூபாய் 32,618,000 |
| உண்மைப் பெறுமானம் | ரூபாய் 24,637,766 |

ஆண்டின் வருமானம், இறுதிக்கணக்கில் குறிப்பு இல. 29இல் அடங்கியுள்ள ரூபாய். 24,637,766 இல் (கணக்கு இல. 127,188) காட்டப்படுவது அட்டுறு அடிப்படையில் கணக்கு தயாரிக்கும் போது ஆண்டுக்காகப் பயன்படுத்திய எழுதுபொருள்களின் பெறுமானம் மாத்திரமாகும். அதற்கு மேலதிகமாக, ஆண்டினுள் கொள்வனவு செய்த, ரூ. 5,995,861.48 அளவுள்ள இறுதிக் கையிருப்பினுள் அட்கியுள்ளது. நுகர்வுப் பொருள்களின் பெறுமதியாகிய ரூ. 1,413,083.98 பணத்தொகை (குறிப்பு இல. 29, கணக்கு இல. 189) மேற்படி செலவில் அடங்கியுள்ளது. அப்போது செலவு ரூபாய் 32,046,711.46 ஆகும். அதற்கமைய வேறுபாடு ருபாய் 571,288.54 ஆகும். சதவீதம் 1.75 சதவீதமாகும்.

**கற்பித்தல் சாதனங்கள்**

| | |
|---|---|
| வரவு செலவுத்திட்டப் பெறுமானம் | ரூபாய் 574,000 |
| உண்மைப் பெறுமானம் | ரூபாய் 167,858 |

கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 167,858 தொகை உண்மைச் செலவு இறுதிக் கணக்குகளில் (குறிப்பு இல. 29, கணக்கு இல 0129) குறிப்பிடப்ப்டுள்ள பெறுமானம் மாத்திரமேயாகும். அதற்கு மேலதிகமாக, கணக்கின் குறிப்பு இல. 32 இல் செயலமர்வுச் செலவுகளுக்காச் செலவாகிய கற்றற் சாதனங்கள் (கணக்கு இல. 156) இன் கீழ் உள்ள ரூ. 402,591 தொகை செலவு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய உண்மை செலவு ரூபாய் 570,449 ஆகும். அதற்கமைய வேறுபடும். ரூபாய். 3551 ஆகும். சதவீதம் 0.62 சதவீதமாகும்.

பராமரிப்பு

**வாகனங்கள்**

வரைவு இறுதிக்கணக்குகளின்படி வரவு - செலவுத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. வரைவுக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் பராமரிப்புச் செலவின்படி வரவு செலவு திருத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கணக்குகளில் குறித்த பேரேட்டுக் குறிப்புகளின்படி இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

**இயந்திரோபகரணங்கள்**

| | |
|---|---|
| வரவு செலவுத்திட்டப் பெறுமானம் | ரூபாய் 1,700,000 |
| உண்மைப் பெறுமானம் | ரூபாய் 3,420,998 |

இன்கீழ் உள்ள உண்மைச் செலவினுள் மூலதன ஒதுக்கினுள் உள்ள மீண்டுவரும் மற்றும் மேம்படுத்தல்களைச் சேர்ந்த ஒதுக்கீடுகள் மூலம் செய்யப்பட்ட செலவுகளும்

அடங்கியுள்ளமையால் (செலவு வகைப்பாடடில்) இந்நிலமை ஏற்பட்டுள்ளது.

**கட்டடங்கள்**

| | |
|---|---|
| வரவு செலவுத்திட்டப் பெறுமானம் | ரூபாய் 2,500,000 |
| உண்மைப் பெறுமானம் | ரூபாய் 4,381,572 |

இதன்கீழ் உள்ள உண்மைச் செலவினுள் மூலதன ஒதுக்கினுள் உள்ள மீண்டுவரும் மற்றும் மேம்படுத்தல்களைச் சேர்ந்த ஒதுக்கீடுகள் மூலம் செய்யப்பட்ட செலவுகளும் அடங்கியுள்ளமையால் (செலவு வகைப்படுத்தல்களினால்) இந்நிலமை ஏற்பட்டுள்ளது.

**ஏனைய தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும்**

| | |
|---|---|
| வரவு செலவுத்திட்டப் பெறுமானம் | ரூபாய் 5,600,000 |
| உண்மைப் பெறுமானம் | ரூபாய் 7,846,192 |

இதன்கீழ் உள்ள உண்மைச் செலவினுள் மூலதன ஒதுக்கினுள் உள்ள மீண்டுவரும் மற்றும் மேம்படுத்தல்களைச் சேர்ந்த ஒதுக்கீடுகள் மூலம் செய்யப்பட்ட செலவுகளும் அடங்கியுள்ளமையால் (செலவு வகைப்படுத்தல்களினால்) இந்நிலமை ஏற்பட்டுள்ளது.

**ஒப்பந்தச் சேவைகள்**

**தொடர்பாடல்**

ஏற்றுக் கொள்கின்றேன்

வரைவு நிதிக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு, வரவு - செலவு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இறுதி நிதிக்கூற்றைத் தயாரிக்கும்போது செய்யப்பட்ட கணக்கு இணக்கப்பாடுகள் காரணமாக இந்த வேறுபாடு தோன்றியுள்ளது.

**வங்கிக்கட்டணம், வட்டி, கணக்காய்வுக் கட்டணம்**

| | |
|---|---|
| வரவு செலவுத்திட்டப் பெறுமானம் | ரூபாய் 1,550,000 |
| உண்மைப் பெறுமானம் | ரூபாய் 996,240 |

இன்கீழ் உள்ள உண்மைச் செலவு ரூபாய் 996,240 இல் காட்டப்பட்டிருப்பது கணக்காய்வுக் கட்டணத்துக்கு (கணக்கு இல. 150) கீழ் இறுதிக் கணக்கில் காட்டப்பட்டுள்ள பணம் மாத்திரமாகும். குறிப்பு இல. 35 இன் கீழ் உள்ள, ரூபாய் 309,075.54 வங்கிக்கட்டணத்தை (கணக்கு இல. 168) கவனத்திற் கொள்ளும்போது உண்மைச் செலவு ரூபாய் 1,305,315.54 ஆகும். இதற்கமைய வேறுபாடு ரூபாய் 224,684.46 ஆகும். அப்போது சதவீதம் 15.8 ஆகும்.

**தற்போதைய நிலைமை**

நிறுவனத்தில் நிதி முகாமைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு மாதாந்தக் கூட்டங்கள் நடத்தி குறித்த நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் வேறுபாட்டை இழிவாக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

தாபனப் பேரவையின் அனுமதியுடன் சம்பளம் தயாரிக்கும்போது இடம் பெற்றுள்ள குறைபாடுகள் வழுக்களைத் திருத்துவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மேலதிகமாகச் செலுத்தப்பட்ட சம்பளங்களை சரியாகக் கணித்த பின்னர் அது தொடர்பாக திறைசேரியுடன் கலந்துரையாடி அந்தந்த ஊழியரின் மீதியாக உள்ள சேவைக்காலத்துக்குப் பொருத்தமான அவர்களது மாதாந்தச் சம்பளத்திலிருந்து மேலதிகமாகச் செலுத்திய சம்பளத்துக்குரிய குறித்த கழித்தல்களைச் செய்ய நடடிவடிக்கை எடுக்கப்படும்.

இதுவரையில் அண்மையில் ஓய்வு பெற்ற மற்றும் விலகிச் சென்ற ஊழியர்களின் பணிக்கொடைகளைச் செலுத்தும்போது மேலதிகமாகச் செலுத்தியுள்ள சம்பளத்தை அறவிட்டுக்கொள்வதற்காக, குறித்த பணிக்கொடைப் பணம் மூலம் கணிக்கப்பட்ட பணத்தொகையைக் கழித்த பின் மீதித்தொகை செலுத்தப்பட்டுள்ளது.

பொது வணிகங்கள் தொடர்பான செயற்குழுவின் சிபாரிசுப்படி, பணியணியினரின் சம்பளத்தை அதிகரித்துக்கொள்வதற்காக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமையால் அச்சம்பள அதிகரிப்பின் பின்னர் இவ்வாறு மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள பணத்தொகைகளை இலகுவாக அறவிட்டுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

ரூபாய். 156,684 ஆகவுள்ள ஊழியர் நம்பிக்கை நிதியம் கூடுதலாகச் செலுத்தப் பட்டிருந்த அதிகாரிக்கு பணத்தை மீளச் செலுத்துமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதற்குப் பதில் கிடைத்த பின்னர், அது தொடர்பான இறுதியான நிலைமையைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்துக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

